243 43

தொகுதி 11.] 1932௵ நவம்பர்௴ [பகுதி 10.

# மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10 0

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

MADRAS

# இரத்தினபுரி இரகசியம்

## எட்டாம் பாகம்

-600 003
186574

### 39-வது அத்தியாயம்

### தோட்டத்தில் சம்பவி[illegible]

அங்கிங்கெனுதபடி எங்கும் நிரம்பியுள்ள எல்லாம் வல்ல இறைவனது அருளால் இரத்தினபுரி இரகசியத்தின் முதல் ஆறு பாகங்களுடன் சம்பந்தமில்லாத தனிக்கதையை ஏழாம் பாகத்தில் ஆரம்பித்து 38-அத்தியாயங்கள் வரை அதில் முடித்து இந்த எட்டாம் பாகத்தில் அக்கதையின் தொடர்ச்சியை 39-வது அத்தியாயத்திலிருந்து ஆரம்பித்துள்ளோம். நமது கதையில் கூறப்பட்ட சந்திரசேகரம் பிரபுவின் சகோதரியும், கிருஷ்ணகிரி இளைய ஜமீன்தார் தினகரம் பிரபுவுக்கு வாழ்க்கைப்படுவதென்று நிச்சயிக்கப்பட்டவளுமான ஷண்பகவல்லி அவளுக்குச் சங்கீதம் சித்திரம் முதலிய கலைகளைக் கற்றுக் கொடுத்தவனும், அழகிலும் குணத்திலும் சிறந்தவனுமான மோகனதாஸினிடம் தனியாக் காதல் கொண்டதும், ஒருநாள் பாடம் கற்பித்த வேளையில் இருவரும் பரஸ்பரம் தங்கள் காதலை அறிவித்துக்கொண்டதனுல் சந்தோஷமடைந்திருந்த ஷண்பகம், அந்த மோகனதாஸ் கிருஷ்ணகிரி ஜமீன்தாரணியாகிய ஹேமவதி சீமாட்டியை மோகித்து அவளிடம் ஒழுக்கஹீனமாக நடந்து கொண்

டதாக அச்சீமாட்டியின் வாயிலிருந்தே அறிந்து அளவிலா துக்கப்பட்டாள் என்பதும் முன் அத்தியாயங்களில் கூறப்பட்டிருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதுமட்டுமா? மோகனதாஸைப்பற்றி ஹேமவதி சீமாட்டி கூறியதுமட்டுமல்லாமல் ஒருநாள் இரவு அவளே புறப்பட்டு அவன் இடத்துக்குக்குச் சென்றபோது அங்கு அவன் நாடக உலகில் பிரசித்திபெற்ற ராஜலட்சுமியுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்ததை அவளே தன் இரு கண்களால் நேரில் பார்த்தாளல்லவா? இவ்வாறு தான் காதலிக்கும் ஒருவன், தன்னைக் காதலிப்பதாகச் சொல்லியும் தனக்குத் தெரியாமல் இன்னும் சில மாதர்களையும் நேசிக்கிறுனென்றல் சுயமதிப்புள்ள எந்த பெண்மணிதான் பொறுமையுடன் இருக்க முடியும்? அவனைக் கண்டு பேசினல் அவனது நடத்தைக்கு அவன் ஏதேனும் சமாதானம் சொல்லக்கூடுமென்றும் நினைத்தாள். ஆயினும் கேவலம் ஒரு நாடகக்காரியுடன் கூடிக்குலாவும் ஒருவன் ஒழுக்கஹீனனுகவும், காமவெறியனுகவும்தான் இருக்க வேண்டுமென்று அவள் முடிவு செய்ததில் என்ன ஆச்சர்யமிருக்கிறது. இதற்கு முன் அத்தியாயத்தில் சொன்ன நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டுக் கிரகப்பிரவேச விருந்து முடிந்தபோது ஷண்பகவல்லியின் இத்தகைய துயரமும் சந்தேகமும் ஏற்பட்டு ஒருவாரம் கடந்துவிட்டிருந்தது.

ஒருவாரமாகச் சதா சர்வ காலமும் ஷண்பகவல்லி அதே சிந்தையுடன் இருந்தாள். தான் எவ்வளவுதான் அதை மறந்துவிட வேண்டுமென்று நினைத்தாலும் மறக்க முடியவில்லை. அதே சிந்தனையாகவும் துக்கத்துடனும் இருந்ததால் அவளது முகத்தில் சந்தோஷக்குறி என்பதே காணப்படவில்லை. இதனல் அவளது சிற்றன்னையாகிய மதனவல்லியும் அவளுடைய உண்மை விஷயத்தை அறியாதவளாததால் அப்

பெண்மணி ஏதோ தேக அசௌகரியத்துடன் இருக்கிறாள் என்று நினைத்தாள். ஷண்பகவல்லியும் தனக்குத் தேக அசௌகரிய மென்றும், ஆனால் வைத்தியர் உதவி அவசிய மில்லை யென்றும் இரண்டொரு தினங்களில் சரியாய்விடு மென்றும் கூறினாள். ஆகவே அந்த வாரத்தின் பெரும் பாகத்தை அவள் தன் அறையில் தனியாகக்கழித்தாள். வழக் கப்படி சித்திரம் வரைவதிலோ சங்கீதத்திலோ அதிக கவனம் செலுத்தவில்லை. சித்திர, சங்கீதக் கருவிகளைப் பார்க்கும் போதும் அவை, தனக்கு அக்கலைகளைக் கற்றுக்கொடுத்த மோகனதாஸின் ஞாபகத்தை உண்டாக்கிய படியால் அக் கருவிகளையும் அவள் தன் எதிரில் வைத்துக் கொள்ளவில்லை. அந்த வாரத்தை ஷண்பகவல்லிக்குத் துக்கத்தை அளித்த் வாரமென்றும் கூறலாம். பெரும்பாலும் அவள் பதுமை யைப்போல் உட்கார்ந்திருக்கும்போது அவள் கண்களி னின் றும் நீர் தாரையாகப் பெருகி ஓடிவரும். சிற்சில சமயங் களில் அவளது மார்பும் பெருமூச்சினால் விரிவடையும். காரணமென்ன? அப்பெண் அடைந்த காதல் சம்பந்தமான ஏமாற்றமும் துக்கமும்தான் என்பதில் ஆட்சேப மில்லை.

ஆனால் அந்த வாரத்தில் மோகனதாஸ் தன்னுடைய கருத்தை அவளுக்குத் தெரியப்படுத்த முயற்சி செய்யாமல் இருந்தானா என்று கேட்கலாம். ஹேமவதி சீமாட்டி மதன வல்லியின் வீட்டுக்கு வந்து மோகனதாஸின்மீது பழி சுமத்தி விட்டுச் சென்ற தினமே அவன் அவ்வீட்டுக்கு வழக்கப்படி சென்றபோது அங்கிருந்த சேவகர்கள், இனி அவன் அங்கு வரலாகாதென்றும், அவனை ஆசிரியர் வேலையினின்றும் நீக்கி விட்டிருப்பதாகவும், அவன் தனக்குச் சேரவேண்டிய தொகைக்கு பில் அனுப்பலாமென்றும் சொல்லி விட்டது நேயர்கள் ஞாபகத்தி லிருக்கலாம். முதலில் அவன், தனக்

கும் ஷண்பகவல்லிக்கு மிடையில் காதல் ஏற்பட்டிருப்பதை மதனவல்லிச் சீமாட்டி அறிந்து விட்டிருப்பாள் என நினைத்தான். ஆனால் மறுநாள் தன்னைப்பற்றி ஹேமவதி சீமாட்டி அவதூறாகப் பழி சுமத்திக்கொண்டு திரிகிறாள் என்பது அவனுக்குத் தெரியவே இதனால்தான் மதனவல்லியின் வீட்டிலும் தனக்கு அப்படிப்பட்ட எதிர்பாராத அவமதிப்பு ஏற்பட்டது என்று யூகித்துக் கொண்டான். ஆகவே அவன் மதனவல்லிச் சீமாட்டிக்கு ஒரு கடிதம் எழுதி அதில் தன்னைப்பற்றி அவதூறான பழிச் சொல் வெளியாகிக் கொண்டிருக்கிறதென்றும், தனக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால் தனக்கும் ஹேமவதி சீமாட்டிக்கு மிடையில் நடைபெற்ற உண்மையான விஷயத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தான். ஆனால் அக்கடிதம் அப்படியே திருப்பி யனுப்பப்பட்டது. இரண்டாவது கடிதம் எழுதிப் பார்த்தான் அதுவும் முதல் கடிதம் அடைந்த கதியையே அடைந்தது. ஆகவே நேரிலாவது பார்த்துப் பேசலாமென்று ஒருமுறை அவ் வீட்டுக்குச் சென்றான். அவனைப் பார்த்துப் பேச மதனவல்லி மறுத்து விட்டாள். ஆதலின் அவன், ஷண்பகவல்லியை யாவது தனியாகச் சந்திக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் பல முறைகளில் அம்மாளிகையின் அறையில் பதுங்கியிருந்து பார்த்தான். ஆயினும் அவனது நோக்கம் கைகூடவில்லை. அன்று மோகனதாஸின் வீட்டுக்கு இரகசியமாகச் சென்று தோட்டத்தில் பதுங்கியிருந்து மோகனதாஸும் ராஜலட்சுமியும் ஒன்றாக வெளியே வந்தபோது தன்னால் தாங்க முடியாமல் ஓவென்று கத்திவிட்டு ஓடி வந்தது ஷண்பகவல்லி என்று மோகனதாஸுக்குத் தெரியாதாதலையால் அவளுக்குத் தன்னைப்பற்றி எவ்வித சந்தேகமும் இராதென்றும், ஹேமவதியின் பொய்க்கதையை அவள் நம்பி யிருக்க மாட்டாளென்றும் நினைத்து அவள் தனக்கு விரோதமாக

இருக்க மாட்டாள் என்று நிச்சயித்தான். அப்படி ஒருகால் ஏதேனும் சந்தேகம் இருந்தாலும் தான் தக்கபடி சமாதானம் கூறி விட்டால் அவள் சந்தோஷமடைந்து விடுவாள் என்றும் நினைத்தான். ஆகவே எப்படியாவது அவளைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பி பலமுறை அவளது மாளிகையின் அருகில் பதுங்கி யிருந்தும் அந்த ஒரு வாரத்துக்குள் அவளைக் காணும்படியான சமயம் அவனுக்குக் கிடைக்கவே யில்லை. ஷண்பகவல்லி தன் சிற்றன்னையுடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது மோகனதாஸ் இரண்டு கடிதங்கள் எழுதியதாயும் அதைத்தான் திருப்பி விட்டதாயும் நேரில் பார்த்துப் பேசவிரும்பிய போதும் அவ்வாறு செய்ய மறுத்து விட்டதாகவும் மதனவல்லிச் சீமாட்டி ஷண்பகவல்லியிடம் தெரிவித்தாள். ஷண்பகம் அதை சாதாரணமாகக் கேட்பவள் போலத்தான் கேட்டாள். அதனால் மோஹனதாஸ் விஷயத்தில் ஷண்பகவல்லி ஏதோ விசேஷ அக்கரையுடையவளாக இருக்கிருள் என்று மதனவல்லி தெரிந்துகொள்ள முடியவில்லை. ஷண்பகவல்லியும் அவன் அவ்வாறு தன் சிற்றன்னையைக் காணவருவதெல்லாம் ஏதோ சமாதானம் சொல்லிக் கொள்ளத்தான் இருக்குமென்று நினைத்ததால் அவளுக்கு அதிகமான அனுதாபம் உண்டாகவில்லை. மேலும் தன் மனத்தில், 'அன்று இரவில் அவன் வீட்டுவரையில் போய் அவனுடைய மர்மத்தை நான் அறிந்துவந்தது அவனுக்குத் தெரியாது. நான் அவ்வாறு துணிச்சலுடன் அங்கு போயிருப்பேனென்றும் அவன் நினைத்திருக்க மாட்டான். அவனுடைய விஷயம் எதுவும் எனக்குத் தெரியாதென்று அவன் நினைத்துக் கொண்டிருப்பதால் ஹேமவதி சீமாட்டி அவனைப்பற்றிக் கூறும் கதைக்கு மட்டும் சமாதானம் சொல்லிவிட்டால் போதுமென அவன் நினைத்துக்கொண்டிருக்கலாம். என் சிற்றன்னையிடம் சமா

தானம் கூறி அவள் திருப்தியடைந்துவிட்டால் என்னிடம் பழையபடி நெருங்கிப்பழகலாம் என்று நினைக்கிறான்போலும் ஆனால் ஐயோ! அவனுடைய அந்தரங்க சமாசாரத்தையும் நான் அறிந்து கொண்டு விட்டேனே; இனி அவன் விஷயத்தில் எனக்குச் சமாதானம் ஏற்படுமா? அப்படிப்பட்ட அவனிடம் என் வாழ்க்கையையே ஒப்படைத்து இன்பம் அனுபவிக்க வேண்டுமென்று நினைத்தேனே. இதைவிட தினகரம் பிரபுவை மணந்துகொள்வதே ஆயிரம் மடங்கு மேலானதாகும். தினகரம் பிரபு நற்குண நல்லொழுக்கமுடையவனல்லவென்றாலும் யோக்கியன்போல் நடிப்பதில்லை. உள்ளொன்றும் புறமொன்றும் நடிப்பது இல்லாமல் இருக்கிறான். ஆனால் யோக்கியனைப் போல் நடந்துகொள்ளும் மோகனதாஸோ பொய்யான வேஷமுடையவனாக இருக்கிறான். ஆ! இனி அப்படிப்பட்டவனுடைய உருவமே என் மனக்கண் முன் தோன்றாதபடி மறந்துவிடவேண்டும். நான் அவனை எப்போதுமே நேசியாதவள் போல் இருந்துவிட வேண்டும். இதெல்லாம் கடவுள் எனக்கு அறிவிக்கும் படிப்பினை என்றே நினைக்கிறேன். நான் என் யதேச்சையாக எதையும் செய்யாமல் என் சுக சௌகரியங்களை என் உற்றார் உறவினரிடம் ஒப்படைப்பதே நலமென இறைவன் அறிவிக்கிறார் என்றே நினைக்கிறேன்' என்று கூறிக்கொண்டாள்.

ஷண்பகவல்லி தன் காதலனான மோகனதாசின் நடத்தையைக் கண்டுபிடித்த ஒரு வாரத்திற்குப்பின் ஒரு நாள் மாலை மேற்கூறியவாறு சிந்தித்தாள். அவள் இவ்வாறு சிந்திக்கும்போது அம்மாளிகையின் தோட்டத்தின் பக்கமாக ஜன்னலையுடைய ஒரு அறையில் தோட்டத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். தோட்டத்திலிருந்து புஷ்பங்களின் மீது விழுந்து வரும் காற்று அவள் முகத்தில்

இவ்வித யோசனையால் தோன்றிக் கொண்டிருந்த வியர்வையைப் போக்கி வந்தது. எனினும் சிறிது நல்ல காற்று வாங்கும் பொருட்டு அவ்வறையை விட்டுத் தோட்டத்தில் வந்தாள். அத்தோட்டத்தின் மத்தியில் ஒரு மேடை இருந்தது. அதன்மீது ஏறி நின்று தோட்டத்தின் மதிலுக்கு அப்பால் நடப்பதைக் காணலாமென்று அவள் நினைத்து அவ்வாறே பார்த்தபோது திடீரென்று அவள் மனம் திக்பிரமையை யடைந்தது. காரணமென்ன? தன் மனதில் சதா தோன்றிக் கொண்டிருந்த அந்த மோகனதாஸ் மதிலுக்கப்பால் ஒரு சந்தில் நின்றிருந்ததைக் கண்டதுதான். அவனும் ஷண்பகவல்லியின் முகத்தைக் கண்டதும் தனக்கும் தெரியாமல் ஒருவித சந்தோஷக் கூச்சலிட்டான். அது அப்பெண்மணியின் காதிலும் கேட்டது. முதலில் அவள் மாளிகையில் போய்விடலாமா என்று நினைத்தாள். ஆனால் மற்றொரு அதிக பலமுள்ள சக்தி அவள் அசையாதபடி அங்கேயே நிறுத்திவிட்டது. உடனே மோகனதாஸும் அத்தோட்டத்தின் வாயிலில் வந்து அதன்மீது ஏறிக் குதித்து உள்ளே நுழைந்தான். அதைக் கண்டவுடன் ஷண்பகவல்லி இதனால் என்ன ஆபத்து ஏற்படுமோ என்று பயந்து, 'ஐயா! உடனே வெளியே போய்விடு. இங்கே ஒரு நிமிஷமும் நிற்காதே, ஆபத்து வரும்' என்று பரபரப்புடன் கூறினாள். ஆயினும் அவன் போகாமல் ஏதோ சமாதானம் கூறுபவன் போலவும், வெட்கப்படுபவன் போலவும், மன்னிப்புக் கேட்பவன் போலவும் முகத்தைக் காட்டிக் கொண்டே அவள் முன்னேயே நின்றான். அவளுக்கும் அவனிடம் உண்மையிலேயே அந்தரங்க விசுவாச மிருந்ததால் உடனே அதை மறக்க முடியவில்லை. அவனுடைய பார்வை அவளை மயக்கிவிட்டது. ஆகவே அவளும் அவனை மன்னித்துவிட்டு அவன் இஷ்டப்படி நடக்க விரும்புபவள்போல் காணப்பட்டாள்.

பிறகு மோகனதாஸ், 'ஷண்பகவல்லிச் சீமாட்டி! இரண்டொரு நிமிஷம் எனக்குப் பேட்டியளித்துப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் நாம் இருவரும் பிரிந்துவிட நேரிடும்போலிருக்கிறது. ஆனால் நீ என்னைப்பற்றிக் கேள்விப்பட்ட அவதூறை நம்பி என்னையே அடியோடு மறந்துவிடாமலிருக்கும் பொருட்டு நான் சமாதானம் சொல்லிக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. என் சமாதானத்தையும் கேட்காமல் என்னை அனுப்பிவிடக்கூடிய அவ்வளவு கடுமையானவளாக நீ இருக்கமாட்டாய் என்று நம்புகிறேன்' என்று கேட்டுக் கொண்டான். அவன் தான் சொல்வதை மற்ற யாரும் கேட்டுவிடக் கூடாதென்னும் எண்ணத்துடன் மெதுவாகவும் அடக்கமாகவும் சொன்னான். ஷண்பகவல்லி மேடையின்மீது நின்றிருந்தாளென்றாலும் அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவள் காதில் நன்றாக நுழைந்தது. அப்போது அவள் அவனை மற்றொரு முறை உற்றுப் பார்த்தாள். அவனது ஒப்புயர்வற்ற அழகும், அவனது சங்கீதம் போல இனிய சொல்லும், புஷ்பத்தின் வாசனைபோன்ற அவனது அன்பின் மணமும் அவளைத் தாக்கியதால் அவள் தன் பிடிவாதத்தை யெல்லாம் விட்டுக் கொடுத்து அவனுக்கு இணங்க வேண்டும் என்னும் உணர்ச்சியைப் பெற்றாள். அவளது உள்ளத்தில் ஒருவிதமான அன்பும் அபிமானமும் உதயமாயிற்று. ஆனால் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. தான் மனமாரக் காதலித்த அவனை மீண்டும் பூரண அன்புடன் உற்றுப் பார்த்தாள். அவனுடைய அன்பை மீண்டும் பெறுவதற்காக இவ்வுலகத்தையே அவனுக்கு அளிக்கவும் தயாராக இருப்பவள் போலக் காணப்பட்டாள்.

அப்போது அவள் மனத்தில் நிகழும் யோசனைகளை

அறிந்து கொண்டவள்போல், 'ஆ! உன் காதில் விழுந்த என்னைப்பற்றிய அவதூறான கதையை நீ முற்றும் நம்பிவிட்டாய் என்றே நினைக்கிறேன். ஷண்பகம்! தயவு செய்து அம் மேடையினின்றும் இறங்கிக் கீழே தோட்டத்தில் வா. அல்லது நான் உனக்கு எப்படி ஒரு கடிதம் அனுப்ப முடியும் என்பதற்கேனும் வழி சொல். உனக்கொரு கடிதம் எழுத வேண்டுமென்று நான் மிக்க ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அதனால் உன்னைச் சமாதானப்படுத்த முடியுமா என்று சந்தேகம் ஏற்பட்டதால் எழுதாமல் இருந்துவிட்டேன்' என்று கூறியதும் ஷண்பகவல்லி திடீரென்று தன் எண்ணத்திலும் தோற்றத்திலும் மாறுதலடைந்தவளாய் அதிக ஆத்திரத்துடனும் பரபரப்புடனும், 'என்ன; சமாதானப்படுத்துவதா! ஆம்; இப்போது எவ்வளவோ தூரம் சமாதானப் படுத்திவிட்டதாகவே நினைக்க வேண்டும். நானும் ஒரு உண்மையான உத்தம மாதாக இருந்தால், என் பெண் சமூக கௌரவத்தைக் காப்பவளாக இருந்தால் இந்தச் சொற்ப நேரமும் நான் இங்கு இருந்திருக்கக் கூடாது. உன்னைப் பேசவும் அனுமதித்திருக்கலாகாது' என்று கூறினாள். அடுத்த நிமிஷமே அவள் அங்கு காணப்படவில்லை. தன் வார்த்தைகளைக் கூறி முடித்ததும் அவள் மாயமாய் மறைந்து போனதுபோல் குதித்தோடித் தன் அறைக்குப் போய்விட்டாள். மோகனதாஸ் கேவலம் ஒரு நாடகக்காரியுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்ததைத் தானே கண்டது அவளுக்கு அச்சமயத்தில் ஞாபகத்துக்கு வந்துவிடவே அவ்வளவு ஆத்திரமடைந்தாள். அதுமட்டுமா? ஷண்பகவல்லி கதவையும் மூடிக்கொண்டு போய்விட்டாள். அதனால் பாவம் மோகனதாஸ் ஏமாற்றமடைந்தான். இனி தனக்கு எத்தகைய நம்பிக்கையும் இல்லை என்று உணர்ந்தான். அப்போது அவன், 'ஐயோ கடவுளே! ஹேமவதி சிமாட்டி சரியாக நம்மீது பழிவாங்கிவிட்டிருக்கி

ளுள். அவள் என்னைப்பற்றிய அவதூறு பலரும் நம்பும்படி பக்குவமாகச் சொல்லியிருக்கிருள்' என்று மனதில் நினைத்துக் கொண்டு, அவ்வழகிய பெண்மணி நின்றிருந்த அம் மேடையையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டே மனக் கலக்கத்துடன் நின்ருன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் தான் இனியும் அங்கு நிற்பது ஆபத்தாக முடியும் என்று நினைத்தான். ஆகவே அவன் ஏமாற்றத்தாலும் 'துக்கத்தாலும் பெருமூச்சு விட்டுக் கொண்டே அவ்விடத்தை விட்டுத் திரும்பினுன். ஆனல் அவன் அத்தோட்டத்தின் வாயிலைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது அவ்வாயிலருகில் அவன் ஒரு ஆளைக் கண்டு நடுங்கினுன். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்ததும் சிறிது பின்வாங்கினுர்கள். இருவரும் ஒருவரை யொருவர் கூர்மையுடன் உற்றுப் பார்த்தார்கள். இருவருடைய வாயிலிருந்தும் ஒரே சமயத்தில் 'ஆ! மோகனதாஸ்! ஓ, சந்திரசேகரம் பிரபுவா!' என்னும் சொற்கள் வெளியாயின. சிறிது நேரம் இருவரும் மௌனம் சாதித்தனர். அவ்வேளையில் சந்திரசேகரம் பிரபு சித்திர நிபுணனை மோகனதாஸைத் திக்பிரமையுடன் உற்று நோக்கினுன். மோகனதாஸும் இப்படிப் பட்ட சந்திப்பு ஏற்பட்டதன் காரணமென்ன வென்று ஆச்சர்யமடைந்து திக்பிரமையுடன் நின்ருன். பிறகு சந்திரசேகரம் பிரபு அதிகார தோரணையுடன், 'ஐயா! நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிருய் என்று நான் கேட்பதற்குப் பதில் சொல்' என்று கேட்டான். அதற்கு மோகனதாஸும் உடனே, 'ஐயா! நான் அவசியமாகக் கூறவேண்டு மென்று நினைத்த சமாதானத்தைக் கூறிக் கொள்வதற்காக இவ்விடம் வந்தேன்' என்று சொல்லி முடிப்பதற்குள் சந்திரசேகரன், 'என் சிற்றன்னை உன்னை இங்கு வாவேண்டாமென்று கட்டளை

யிட்டிருப்பதாகத் தெரிகிறதே. அப்படியிருக்கும்போது நீ எப்படி இங்கே வரலாம். அவளுக்குப் பல கடிதங்களை நீ எழுதினுயாம், அவள் பதில் அளிக்காததால் அவளை எப்படி யாவது கண்டு பேசலாமென நீ இங்கு பலாத்காரமாக நுழைந் தாய் போலும்! உடனே வெளியே போய்விடு' என்று அதி காரத்துடன் கட்டளையிட்டான்.

அதைக் கேட்ட மோகனதாஸ் சிறிதும் அஞ்சாதவன் போல், 'நான் இங்கு வந்ததால் என்ன மூழ்கிவிட்டது. என் மீது என்ன குற்றம் சுமத்துகிறுய்' என்று கேட்டான். அத ஞல் பிரபுவுக்குக் கோபம் அதிகரித்துவிட்டது. ஆகவே இவன் ஆத்திரத்துடன், 'என்ன! நான் சொல்வதை நீ அலட் சியமாக நினைக்கிறுய்? என் சிற்றன்னையைப் பலாத்காரமா கச் சந்திக்க நீ இங்கு நிற்கும்போது நான் இதில் பிரவே சித்து உன்னைத் துரத்துவதற்கு எனக்கு உரிமை இல்லையா?' என்று கேட்டான். சந்திரசேகரம் பிரபு பேசியதிலிருந்து அவன் மோகனதாஸ் விஷயத்தில் ஷண்பகவல்லியின் சம்பந் தமாய் எத்தகைய சந்தேகமும் அடையவில்லை என்று தெரிந் ததால் மோகனதாஸ் உள்ளத்தில் சந்தோஷமடைந்து இன் னும் நிதானமாக அப் பிரபுவைச் சிறிதும் லட்சியம் செய்யாத வன்போல், 'ஆம்; நான் இவ்வாறு நடந்து கொண்டது சந் தேகத்துக்கு இடமானதாகத்தான் இருக்கிறது என்பதை நான் முன்னமே அறிவேன்' என்றுன். அப்போது பிரபு அதிக கோபமடைந்து ஆத்திரத்துடன், 'ஆம்; சந்தேகம் தான். கண்டிப்பாக உன்னைத் திட்டவேண்டிய வகையில் ஏற்படும் சந்தேகமே. உனக்கு எவ்வளவு தைரியமும் கர்வ மும் இருந்தால் இப்படி உள்ளே நுழைவாய். என் கையில் தடி இருந்தால் உன்னை வெளியே கல்தா கொடுத்திருப்பேன்' என்று மிரட்டினுன்.

அதைக் கேட்டு அதிக கோபமடைந்த மோகனதாஸ், தன் கன்னங்கள் சிவக்க, கண்களில் தீப்பொரி பறக்க, 'பிரபுவே! நான் ஏதாவது அதிகமாகப் பேசி என் நடத்தை யில் தவறு இருப்பவன்போல் காண்பித்துக்கொள்ள விரும்ப வில்லை. ஆயினும் நீ மிகக் கடுமையான பதங்களை உபயோ கிக்கிறாய் என்பதை மட்டும் வற்புறுத்த விரும்புகிறேன். உன் பதங்களைக் கேட்கும்போது எவனுக்குத்தான் கோபம் வாராம லிருக்கும். இம் மாளிகையில் உத்திரவின்றி நுழைந்தது தவறு என்று எனக்குத் தெரியும். ஆயினும் தக்க காரணத் துடன் தான் நான் பிரவேசித்திருக்கிறேன். நான் என்மீது கூறப்பட்டுள்ள புகாரை மறுத்து சமாதானம் சொல்லிக் கொள்ள எவ்வளவு விரும்பியும் உன் சிற்றன்னை என்னை நேரில் காணச் சம்மதியாமையால் இவ்வாறு வரவேண்டிய தாயிற்று' என்று கூறினன். அதற்கு சந்திரசேகரன், 'ஆம்! எப்போது என் சிற்றன்னை உன் கடிதங்களையெல்லாம் திருப்பி யனுப்பிவிட்டு உன்னையும் காண மறுத்துவிட்டாளோ அப் போது அவள் உன்னுடன் எத்தகைய சம்பந்தமும் வைத் துக் கொள்ள விரும்பவில்லை யென்று தெரிகிறதல்லவா? அவ்வாறிருக்கும்போது நீ மறுபடியும் பின்புற வாயிலின் வழியே நுழைவதென்றால் அது பலாத்காரப் பிரவேசமன்றோ சட்டப்படி குற்றமல்லவா? உன்னைத் தடுக்கவும் தண்டிக்க வும் எனக்கு உரிமை உண்டு அல்லவா? நாம் இன்னும் அதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்போது நீ செய்த குற்றத்துக்கு என்ன சமாதானம் கூறு கிறாய்?' என்று கேட்கவே, மோகனதாஸ், 'ஐயா! நான் இந்த வீட்டில் நுழைந்தது தவறுதான் என்றும், ஆயினும் தக்க சமாதானத்துடனேயே நுழைந்திருப்பதாகவும் முன்பே தெரிவித்தேனல்லவா? நீ இன்னும் சிறிது மரியாதையாகப்

யிருந்தால் நான் உன் இஷ்டப்படி நடக்கச் சம்மதித்திருப்பேன். ஆனால் நீ மனிதனுக்கு ஆத்திர முண்டாகும்படி பேசியிருப்பதால் ஒரு வார்த்தைகூட மன்னிப்பாகக் கேட்டுக் கொள்ள முயாது,' என்று பதில் கூறினான்.

அப்போது சந்திர சேகரன், 'ஓ, இதுதான் உன் தீர்மானமோ' என்று அதட்டிக் கேட்டான். அதற்கு அவனும் சிறிதும் பின்வாங்காதவன் போல், 'ஆம்; அதுவே என் முடிவான தீர்மானம்' என்று உறுதியுடன் கூறினான். உடனே பிரபுவும், 'அப்படியானால் உன் சிநேகிதன் பெயரைச் சொல். அவனிடம் நான் என் நண்பர் பெயரைச் சொல்கிறேன்' என்றதும், மோகனதாஸ், 'ஓஹோ! எது, துப்பாக்கிச் சண்டைக்கு அறைகூவி யழைக்கிறாய்போ லிருக்கிறது' என்று ஆச்சர்யத்துடன் அப்பிரபுவை நோக்கினான். அவன் இந்த விஷயத்தை அவ்வளவு தூரத்துக்கு எடுத்துச் செல்வான் என்று மோகனதாஸ் நினைக்காததால் இவ்வளவு ஆச்சர்யப்பட வேண்டியதாயிற்று. அவனும் ஆண்மகனே யாதலால் சண்டைக்குத் தயாராக இருந்தானென்றாலும் தான் மனமாரக் காதலிக்கும் ஒரு பெண்மணியின் சகோதரனுடன் சண்டையிட வேண்டுமே என்னும் எண்ணம் அவனை வாட்டிற்று. அப்போது சந்திரசேகரன் 'மோகனதாஸ்! நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நான் அப்போதே கூறினே னல்லவா? நீயாக எதிர்த்துப் பெரிய வீரனைப்போல் பேசியபடியால் அவ்வளவு தூரத்துக்குச் செல்ல வேண்டியதாயிற்று. எதோ உன் ஆண்மையையும் பார்த்துவிடுவோம். நான் உனக்கு ஒரு அடி கொடுத்ததாகவே வைத்துக் கொள்' என்று கூறிக்கொண்டே தன் விரல்களின் முனையால் மோகனதாஸின் கன்னத்தில் குத்தினான். இதனால் அளவுகடந்த ஆத்திரத்தை யடைந்த மோகனதாஸ்,

'பிரபுவே! போதும். அப்படியே துப்பாக்கிச் சண்டை செய்து பார்த்துவிடுவோம். எனது நண்பர் கோபாலர் இதோ அடுத்த தெருவிலேயே இருக்கிறார். நீ அவரிடம் உன் விஷயங்களைச் சொல்லி யனுப்பலாம்' என்று கூறியதும் சந்திரசேகரன், 'சரி, அவரைப்பற்றி எனக்கும் தெரியும். சொல்லியனுப்புகிறேன்' என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுச் சென்றார். மோகனதாஸும் மன வருத்தத்துடன் மெதுவாக அவ்விடத்தைவிட்டுச் சென்றான்.

ஷண்முகவல்லி தோட்டத்தினின்றும் உள்ளே சென்றவள் நேராக வேறொரு மறைவான அறைக்குள் சென்றுவிட்டதால் பின்னர் தோட்டத்தில் நிகழ்ந்த தொன்றும் அவளுக்குத் தெரியாது. மோகனதாஸ் அடுத்த தெருவிலுள்ள தன் நண்பன் கோபாலர் வீட்டுக்குச் சென்று பார்த்ததில் அவன் வீட்டிலில்லாததால் தன் காரியாலயத்துக்கு வரும்படி ஒரு துண்டுக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு நேராகத் தன் காரியாலயம் சென்று, தன் வீட்டிலுள்ள நாடகக்காரி ராஜலட்சுமிக்குத் தான் இரவு வரமுடியா தென்றும், மறுநாள் மத்தியானத்துக்குமேல் வருவதாகவும் ஒரு கடிதம் எழுதி ஆளிடம் அனுப்பிவிட்டு உட்கார்ந்திருந்தான். அப்போது அவன் ராஜலட்சுமி, செல்வநாதர், ஷண்பகவல்லி மற்றும் பல நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் கடிதம் எழுதி அவற்றையெல்லாம் ஒரு காகிதத்தில் வைத்து மடித்து அதன்மீது, 'இதிலுள்ள கடிதங்களை அவரவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று கோரப்படுகிறது' என்று எழுதி அதை மேஜையில் வைத்துப் பூட்டினான். இதற்கெல்லாம் இரண்டு மணி நேர சாவகாசம் பிடித்தது. இதற்குள் தன் வீட்டில் கொடுக்கப்பட்ட கடிதத்தைக்கண்ட கோபாலர் அங்குவந்து சேர்ந்தான். அவன் சுமார் இருபத்து நான்கு வயதினன். பார்

வைக்கு நல்ல தோற்றமுடையவன். நற்குணமுடையவனாகவே காணப்பட்டான். அவன் பரம சாதுவான மோகனதாஸ் எப்படி சந்திரசேகரனுடன் வலுச் சண்டைக்குச் சென்றான் என்று தெரிந்துகொள்ள ஆவல்கொண்டான். மோகனதாஸும் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னான். சந்திரசேகரம் பிரபு துப்பாக்கிச் சண்டையில் பெயர் வாய்ந்தவன் என்றும் அவனுடன் முன்பின் கையாலும் துப்பாக்கியைத் தொடாத மோகனதாஸ் எப்படி சண்டைபோடப் போகிறான் என்றும் கோபாலர் வருத்தப்பட்டான். ஆயினும் இனி செய்வதென்ன? சந்திரசேகரத்தின் சார்பாக அரசாங்க சேனையைச் சேர்ந்த காப்டன் லோலன் தன்னிடம் வந்திருந்ததாகவும், துப்பாக்கிச் சண்டை கோட்டை மைதானத்தில் நடைபெறுமென்றும், சேனையைச் சேர்ந்த டாக்டர் உடன் வருவாரென்றும் கோபாலர் மோகனதாஸிடம் சொல்லிவிட்டு அவனைத் தன் வீட்டுக்கு இராச் சாப்பாட்டுக்கு வரும்படி அழைத்தான். ஆயினும் மோகனதாஸ் அதைமறுத்து மறுநாட் காலை ஆறுமணிக்கெல்லாம் வருவதாகக்கூறி அவனை அனுப்பிவிட்டுத் தான்மட்டும் தனியாகப் பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண் டிருந்தான்.

மோகனதாஸ் தன் நண்பனை கோபாலருடன் செல்ல மறுத்ததில் ஆச்சர்ய மொன்றுமில்லை. ஏனெனின், அப்படிப் பட்ட ஆபத்தான நிலைமையில் யாருமே தனியாக இருந்து சிந்திக்கத்தான் விரும்புவர். பாவம்! மோகனதாஸ் துப்பாக்கியையும் கையால் தொட்டு அறியாதவன். ஆனால் அவனுடைய எதிரியாகிய தினகரம் பிரபுவோ அதில் கைதேர்ந்தவன். ஆகவே அவனுடன் சண்டைபோட்டால் தன் உயிருக்கே ஆபத்து ஏற்படுமென்பது திண்ணம். தானாகவே மாணத்தைச் சம்பாதித்துக்கொண்ட அவன் மனம் துக்க

சாகாத்தில் மூழ்கி யிருக்குமல்லவா? எனவே அவன் வெளி யில் செல்ல மனமில்லாமல் தன் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு பகவானை நினைத்துப் பிரார்த்தித்துக்கொண் டிருந் தான். ஏகாந்தமே எப்போதும் மன நிம்மதியை அளிப்பது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

## 40-வது அத்தியாயம்

### துப்பாக்கிச் சண்டை

மோகன்தாஸின் காரியாலயத்தில் அவனும் அவனுடைய நண்பன் கோபாலரும் பேசிக் கொண்டிருந்த சமயத்தில் அதாவது அன்றிரவு சுமார் பத் தரை மணிக்கு சந்திரசேகரம் பிரபுவின் விடுதியில் என்ன நடந்ததென்றால் அவனும் அநாவசியமாகச் சண்டையில் இறங்கவேண்டுமே என்று சிந்தித்துக்கொண்டிருந்தான். அச் சமயம் தினகரம் பிரபு அங்கேவந்து, சந்திரசேகரம் முன்னாள் தெரிவித்தபடி குறிப்பிட்ட இடத்தில் ஏன் தன்னைச் சந்திக்க வில்லை யென்று கேட்டான். பிறகு இருவரும் வெளியே புறப்பட்டு பல இடங்களுக்கும் சென்று கண்டபடி குடித்து விட்டும் சூதாடியும் பற்பல தாசிகள் வீட்டுக்குச் சென்று உல்லாசமாக இருந்துவிட்டும் இரவையெல்லாம் பலவித இன்பங் களில் கழித்துவிட்டு விடியற்காலையில் இருவரும் தங்கள் இல் லங்களுக்குச் சென்றனர். சந்திரசேகரன் தன் அந்தரங்க வேலைக்காரனுகிய ஆறுமுகத்தினிடம் தன்னை ஐந்து மணிக் கெல்லாம் எழுப்பும்படி சொல்லிவிட்டுப் படுத்துக்கொண் டான்.

இப்போது நாம் அடுத்த தெருவிலுள்ள கோபாலர் வீட்டில் நடப்பதைக் கவனிப்போம். சரியாக மணி ஐந்து

அடித்துவிட்டதால் மோகனதாஸ் தான் அளித்த வாக்குறுதி யின்படி கோபாலர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனிடம் பரம விசுவாசம்கொண்ட கோபாலர் அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு உயிருக்கே ஆபத்து வரக்கூடிய சண்டை விஷயத்தில் அவன் எத்தகைய மனப்பான்மை யுடையவனாக இருக்கிறான் என்பதைக் கவனித்தான். ஆனால் மோகன தாஸ் மனநிம்மதியுடனும் பொறுமையுடனும் இருப்பது போலவே காணப்பட்டான். புதிதாக யாரேனும் அப்போது அவனைப் பார்த்திருந்தாலும் அவன் அடுத்த நிமிஷம் துப் பாக்கிச் சண்டையில் ஈடுபடுபவன் என்று கூறமுடியாதபடி அவ்வளவு களங்கமற்ற முகத்தினனாகக் காணப்பட்டான். அவன் வழக்கப்படி சுத்தமான ஆடையுடன் தோன்றினான். முதல்தரமான காலை ஆகாரம் வழங்கப்பட்டது. மோகன தாஸும் நன்றாகச் சாப்பிட்டான். சாப்பாடு முடிந்ததும் கோபாலர் தன் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, 'இப் போது மணி ஐந்தரை ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமி ஷத்தில் வண்டி வந்து சேரும். நாம் அதில் ஏறிக்கொண்டு கோட்டை மைதானத்துக்குச் செல்ல வேண்டியதுதான். ஏதேனும் விசேஷமாகச் சொல்லிக்கொள்ள வேண்டியிருந் தால் இப்போதே சொல்லிவிடவும்' என்று மோகனதாஸைக் கேட்டான். அப்போது அவன் தன் சட்டைப் பையினின் றும் ஒரு சாவியை எடுத்துக் கோபாலரிடம் கொடுத்து, 'நான் ஒரே விண்ணப்பத்தைச் செய்து கொள்கிறேன். இந் தச் சாவி என் காரியாலயத்திலுள்ள என் மேஜையினுடை யது. நான் சண்டையில் இறந்துவிடுவேனாயின் நீ இதைக் கொண்டு என்ன செய்யவேண்டு மென்பதை நீ அறிந்திருப் பாய் என்றே நம்புகிறேன்' என்று கூறினான். அப்போது கோபாலர், 'அன்புள்ள நண்பா! நீ கூறுகிறபடி உண்மை

யுடனும் நம்பிக்கையுடனும் நடத்தப்படும் என்பதை நிச்சய மாக நம்பு. நீ இன்னும் ஏதேனும் சொல்லிக் கொள்ள விரும்புகிறாயா!' என்று கேட்டான். அதற்கு அவன், 'உனக்கு நீ செய்த உதவிகளுக்காக நன்றி செலுத்துவதைத் தவிர வேறொன்றுமில்லை' என்று கூறிவிட்டான்.

இதற்குள் கோபாலருடைய வேலையாள் அந்த அறை யில் பிரவேசித்துத் தெருவில் வண்டிவந்து காத்திருப்பதாகத் தெரிவித்தான். உடனே கோபாலரும் மோகனதாஸும் ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு வண்டியில் உட்கார்ந்து கொண் டனர். வண்டியும் வேகமாகச் செல்லத் தொடங்கிற்று. செல் லும் வழியில் மோகனதாஸும், கோபாலரும் பல விஷயங்க ளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மோகனதாஸ் இருபது வயதான வாலிபனா யிருந்தும் அவன் தைரியமும் உறுதியு முடைய மனதை உடையவனாக இருந்தான். தான் செய்யப் போகும் சண்டை விஷயத்தில் அலட்சிய புத்தியுடையவனாக இருக்கவில்லை. தன்னாலியன்றவரை சண்டையில் வெற்றிபெற முயற்சிப்பதென்றும் பிறகு இறைவன்விட்ட வழியாகிறதென் றும் துணிவு கொண்டதால் மனச் சாந்தியை அடைந்திருந் தான். கோட்டை மைதானத்துக்குச் சிறிது தூரத்தில் சென் றதும் வண்டியை நிறுத்தி அவர்களிருவரும் கீழே இறங்கி நடந்து சென்றனர். அவர்கள் எடுத்துச் சென்ற பெட்டியில் பல துப்பாக்கிகள் இருந்தன. கோபாலரும் யாருக்கும் தெரி யாமல் கைத்துப்பாக்கிகளை மறைவாக எடுத்துச் செல்லும் பொருட்டு மிகப் பெரிய சொக்காயை அணிந்திருந்தான். சண்டை ஆரம்பமாவதற்கு இருபது நிமிடத்துக்கு முன்னரே அவர்கள் அங்கு இருந்தார்கள். கோபாலர் சுற்றிப் பார்த் ததிலிருந்து தாங்கள்தான் முதலில் வந்தவர்கள் என்று தெரிந்து கொண்டான்.

அன்று காலை நேரம் மிக அழகாக இருந்தது. அப்போதுதான் சூரியன் தன் கிரணங்களுடன் பிரகாசிக்கத் தொடங்கியதால் செவ்வானம் உலகையே அழகு செய்தது. பறவைகள் பசுமையான மரங்களில் உட்கார்ந்து கொண்டிருந்தன. இயற்கை யழகே யழகு. அந்நேரத்தில் மோகன தாஸின் மனம் கஷ்டப்பட்டது. எல்லாப் பிராணிகளும் இன்பமாக இருக்கப் பாழும் மனிதன் மட்டும் தன் பேராசை காரணமாகவும், மனோவிகாரம் காரணமாகவும் இயற்கை இன்பத்தை யனுபவிக்க முடியாமல் வேண்டுமென்று கஷ்டங்களையும் மனத் துயரத்தையும் சம்பாதித்துக் கொள்கிறானே என்று நினைத்து விசனப்பட்டான். அவன் அவ்வாறு கடவுளின் நேர்த்தியான படைப்பையும், அதை மனிதன் கெடுப்பதையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது கோபாலர், 'அதோ அவர்களும் வந்துவிட்டார்கள்' என்று கூறியதால் அதைக் கேட்டுத் தூக்கத்திலிருந்து விழிப்பவன்போல் விழித்து எதிரில் வருபவர்களைக் கண்டான். தன் எதிரி இரு தோழர்களுடன் மைதானத்தில் வருவதை யறிந்தான்.

துப்பாக்கிச் சண்டைக்காகப் புறப்பட்ட சந்திரசேகரம் பிரபு நிதான புத்தியும் பொறுமையு முடையவனல்லவாதலால் அவசரம் அவசரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டதால் பொறுமைக் கடலாகிய மோகனதாஸ் எவ்வளவு சுத்தமாக இருந்தானோ அவ்வளவு சுத்தமாக இருக்கவில்லை. அவனது முகம் பார்க்கும்போதே அவன் முன்னாள் இரவு தாசி லோலனைகத் திரிந்திருக்கவேண்டு மென்பதையும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். அவனுடன் காப்டன் லோலனும் ஒரு டாக்டரும் வந்தார்கள். காப்டன் உண்மையிலேயே அப்பதவிக்கேற்றவாறு உயரமானவனாகவும், தேகபலம் படைத்தவனாகவும் இருந்தான். அவனுடைய பார்வையே பயங்கர

மானதாக இருந்தது. டாக்டரோ சாதாரணமாகக் குள்ள மானவராயும், சிறிது சுறு சுறுப்பானவராயும், அதிக மதுபா னத்தில் மூழ்கியவர் போலவும் காணப்பட்டார். சந்திரசேக ரம் பிரபு மோகனதாஸைக் கண்டதும் கைகூப்பி மரியாதை செய்தான். அவனும் திருப்பி அதே முறையில் மரியாதை செய்தான். உடனே மோகனதாஸ் சார்பாக கோபாலரும், பிரபுவின் சார்பாக லோலனும் சென்று அந்தத் துப்பாக்கிச் சண்டைக்கான நிபந்தனைகளைப்பற்றிப் பேசினார்கள். பிறகு அவர்கள் இருவரும் யுத்த பூமியை அளந்து இன்னின்னவர் இன்னின்ன இடத்தில் நிற்பது என்றும் முடிவு செய்து தங் கள் நண்பர்களிடம்போய் வேலையை ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள்.

உடனே கோபாலர் தன்னுடைய நண்பனாகிய மோகன தாஸினிடம், 'என்னிடம் சொல்வதற்கு வேறு ஒன்றும் இல் லையா?' என்று கேட்டான். அப்போதும் மோகனதாஸ் 'ஒன்றுமில்லை' என்றே உறுதியுடன் கூறினான். ஆகவே அவன் மோகனதாஸினிடம் ஒரு கெட்டிக்கப்பட்ட கைத்துப்பாக்கி யைக் கையில் கொடுத்து, 'அப்படியானால் சரி, இத் துப்பாக் கியை வைத்துக்கொள். காப்டன் லோலன் நின்ற இடத் தையே கூர்மையுடன் பார்த்துக் கொண்டிரு. அவன் தன் கையிலுள்ள வெள்ளைக் கைக்குட்டையை அசைத்ததும் நீ நீ உன் தலையைச் சிறிது தாழ்த்திக்கொண்டு சுட ஆரம்பி' என்று சொல்லிவிட்டு எதிரியாகிய சந்திரசேகரம் பிரபுவின் துப்பாக்கியிலிருந்துவரும் வெடி தனக்குப் படாமலிருக்கும் பொருட்டுச் சிறிது தூரத்தில் நின்றான். இதற்கிடையில் காப்டன் லோலன் தன் நண்பனாகிய சந்திரசேகரம் பிரபுவி னிடம் கெட்டிக்கப்பட்ட ஒரு கைத்துப்பாக்கியைக் கொடுத் துவிட்டு இருவருக்கும் நடுவில் தூர ஒரு இடத்தில் நின்று

கொண்டான். அங்கு வந்த டாக்டரும் மிக கவனத்துடன் இரு சண்டைக்காரர்களையும் கவனிப்பவர்போல் உட்கார்ந்தார்.

எல்லாம் முடிந்துவிட்டது. இருவரும் பாஸ்பரம் குறி பார்த்துச் சுடலாம் என்று அறிவிப்பதற் கறிகுறியாக காப்டன் லோலன் தன் கைக்குட்டையை அசைக்கவேண்டியது தான் பாக்கி, அச்சமயத்தில் 'நிறுத்து' என்று ஒரு பெரிய தொனி கேட்டது. உடனே எல்லாரும் அந்தத் தொனி வந்த திசையை மிக ஆர்வத்துடன் நோக்கினர். செல்வநாதர் டாக்டர் உட்கார்ந்திருந்த பக்கமாகவுள்ள வாயிலின்மீது ஏறி வருவதைக் கண்டார்கள். செல்வநாதர் போலீஸ் படையுடன் வருகிறாரோ என நினைத்த டாக்டர் தன் ஆசனத்தினின்றும் குதித்து ஓட முயன்றான். ஆனால் செல்வநாதர் தனியாக வந்திருக்கிறார் என்பதை அறிந்த பின்னர் அவனும் அமைதியாக உட்கார்ந்தான். செல்வநாதர் தன் தடியைக் கையில் பிடித்துக்கொண்டு மிக கம்பீரமாக அங்கே வந்து சேர்ந்தார். அவர் இன்னாரென்று அறியாத காப்டன் லோலன் ஒருகால் அவர் நீதி இலாகா அதிகாரிகளில் ஒருவரோ என்று நினைத்துக் கொண்டே மீசையை முறுக்கிக் கொண்டு நின்றதுடன் செல்வநாதரைப் பார்த்துத் தன் மனதிலுள்ள கேள்வியையும் கேட்டான். அதற்கு செல்வநாதர் தான் நீதி இலாகாவைச் சேர்ந்தவரல்ல என்று தெரிவித்தார். அவர் இன்னாரென்று அறிந்துகொண்ட சந்திரசேகரம் பிரபு பரிகாசமாக நீதி இலாகா அதிகாரிகள் மூலக் கொத்தளத்தில் ஏழைகளுடன் வசிக்கமாட்டார்கள் என்று கூறினன்.

அப்போது அதை அசட்டை செய்தவர்போல் செல்வநாதர் சந்திரசேகரன் கூறியதைக் கவனியாமல், 'அந்த விவகாரம் இப்போது வேண்டாம். நான் போலீஸ்காரர்களை

அழைத்துக்கொண்டுவந்து உங்களே அவர்களிடம் காட்டிக் கொடுத்துவிட விரும்பவில்லை? எனினும் நீங்கள் இருவரும் இந்தத் துப்பாய்க்கிச் சண்டையை நிறுத்திவிட வேண்டும். என்னை மீறி நடந்தால் உங்கள் குறிக்கு நான் தான் இலக்கு ஆவேன்' என்று கூறிவிட்டு மோஹனதாஸுக்கும் சந்திரசேகரனுக்குமிடையில் நின்று கொண்டார். செல்வநாதரை அவ்விடத்தில் திடீரென்று கண்டதும் மோகன தாஸ் ஆச்சரியமடைந்தான். அவன் முகக்குறியிலிருந்தே அவன் ஆச்சர்யப்பட்டிருக்கிறுன் என்பதை யறிந்த கோபாலர் வந்த ஆள் யாரென்று விசாரித்தான். அதற்கு மோகன தாஸ், 'ஆம்; அவர் யார் என்பது எனக்குத் தெரியும். எனக்குப் பலவகையான உதவிகளேச் செய்திருப்பதால் நான் அவருக்குக் கடமைப்பட்டவனுகவும் இருக்கிறேன். ஆனல் இப்போது நாம் இங்கிருப்பது அவர் எப்படி தெரிந்துகொண்டார் என்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது' என்று கூறினுன். அதற்கு அவன், அப்படியானல் அவர் இவ்வாறு இதில் குறுக்கிடும்படி விடலாகாது. காப்டன் லோலன் என்ன சொல்லுகிருனென்று பார்க்கிறேன்' என்று கூறிவிட்டுக் காப்டனிடம் சென்று இருவருமாகச் சேர்ந்து செல்வநாதரை உற்று நோக்கி அவர் என்ன உரிமையைக் கொண்டு இவ்வாறு அந்தத் துப்பாக்கிச் சண்டையை நிறுத்துவதில் தலையிட்டார் என்று கேட்டனர். மேலும் அச்சண்டை பரஸ்பரம் ஒருவருடைய கௌரவத்தை நிலைநிறுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும்போது அதை நிறுத்தலாமா என்றும் கேட்டனர்.

உடனே வயோதிகரான செல்வநாதர், 'ஓ! நீங்கள் அதைக் கௌரவத்தை நிலை நிறுத்தக்கூடிய தெனக் கூறுகிறீர்கள். ஆனல் நான் அப்படிக் கருதவில்லை, அது மிக ஈனத்

தொழில் என்றே நம்புகிறேன்' என்று கூறவும், ஆத்திர மடைந்த காப்டன் லோலன், 'ஐயா, எச்சரிக்கையுடன் பேசும். நீர் இதை ஈனத் தொழில் என்று சொல்வதால் இதில் ஈடுபட்ட எங்கள் எல்லாரையும் அவமானப்படுத்திய மாதிரியாகும். மற்ருெரு முறை நீர் இவ்வாறு பேசினால் உமது மூக்கைப் பெயர்த்துவிடுவேன்' என்று மிரட்டினான். அதற்கு அவர் சிறிதும் பயப்படாமல், உன்னைப்போன்ற அயோக்கியர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தான் ஜனங்கள் தங்களுக்கெனச் சில வீரர்களைப் பாதுகாப் பாக வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கி றது' என்று கூறியதும் காப்டன் லோலன் மிக்க ஆத்திர மடைந்தவன்போல், 'ஓஹோ! இவ்வாறெல்லாம் கூறுவதை என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. நான் உம் மைத் தண்டிக்கவேண்டியதுதான்' என்றான். அதற்குச் செல்வநாதர் தன் கையிலுள்ள தடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, 'நீ மட்டும் என்னைத் தொட்டுப் பார். உன் விரல் என்மீது பட்டாலும் போதும். உடனே இதோ இத் தடி யால் அடிப்பேன்' என்று கோபத்துடன் கூறினார்.

அப்போது காப்டன் லோலன் உண்மையிலேயே செல் வநாதரை அடிக்கும் எண்ணத்துடன் கையைத் தூக்கினான். அச்சமயத்தில் மோகன தாஸின் நண்பனான கோபாலர் காப் டனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, 'ஐயோ பாவம்! அந்தக் கிழவனை அடிக்காதே. அவருடன் நியாய முறை யில் பேசிப் பார்ப்போம்' என்றான். அதைக் கேட்ட செல்வ நாதர், அசட்டுச் சிரிப்புடன், 'ஓ! நீங்கள் நியாய முறையில் பேசித் துப்பாக்கிச் சண்டை நியாயமானதென்று என் புத்தி யிற்படும்படி செய்ய உங்களால் முடியாது. நீங்கள் இது ஒரு கௌரவமான வேலை என நினைக்கிறீர்கள். ஆனால்

ஏதோ சில காரணங்களுக்காக இரு வாலிபர்கள் எதிர் எதிராய் நின்று துப்பாக்கியால் மரணமடைவதும் நியாயமான காரியமாகுமா?' என்று கூறினர். அதற்கு கோபாலர், 'ஐயா! இந்தச் சண்டை எந்த நோக்கத்துடன் போடப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரிகிறதா' என்று வினவ, செல்வநாதர், 'எனக்குத் தெரியாது. தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. தற்செயலாக இங்கு நடக்கும் விஷயம் எனக்குத் தெரிந்தது. ஆகவே எப்படியாவது இதை நிறுத்திவிட வேண்டும் என்னும் எண்ணத்துடன் இங்கே ஓடிவந்தேன்' என்றார். அப்போது காப்டன் லோலன், 'இந்த மனிதனை என்ன செய்யவேண்டும் தெரியுமா? ஒரு கயிற்றால் அவரது கைகால்களைக் கட்டி ஒரு மரத்துக்குக் கட்டிவிடவேண்டும்' என்று கூறி முடிப்பதற்குமுன் சந்திரசேகரம் பிரபுவும், 'ஆம், ஆம்; அவரை அப்படித்தான் செய்ய வேண்டும்' என்று ஆமோதித்தான். அப்போது மோகனதாஸும் அவர்களிடையே வந்து புகுந்து, 'இல்லை. செல்வநாதரை அவமானப்படுத்துவதை நான் அனுமதிக்கமாட்டேன். ஆயினும் அவரும் இவ்விஷயத்தில் வீணாகத் தலையிடாமல் தூர இருந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்று அவரையும் கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறினான்.

அப்போது செல்வநாதர் அதிக கோபமடைந்து மோகன தாஸைக் கண்டிப்பதுபோல், 'மோகனதாஸ், உன் வாயிலிருந்துமா இப்படிப்பட்ட சொல் வந்தது?' என்று கேட்டார். அதற்கு அவன், 'என தன்புள்ள ஐயா! கோபாலரிடம் நீர் எனக்குத் தெரிந்தவர் என்று சொல்லிவிட்டிருக்கிறேன். ஆதலால் நீர் இங்கு இருந்தால் என் கௌரவத்துக்குத் தான் கேடுவரும்' என்று சொன்னதும் அப்பெரியவர்,

'ஓ! அவர்கள் நீ துப்பாக்கிச் சண்டை செய்வதற்குப் பயந்து உனது நண்பனாகிய என்னை இதை நிறுத்திவிடுவதற்காக அழைத்துவந்தாய் என்று கருதுவதாக நினைக்கிறாய் நான் அப்படியொன்றுமில்லை யென்று அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்' என்றதும் காப்டன் லோலன், 'ஐயா, நீர் சொல் வதையெல்லாம் நாங்கள் நம்ப முடியாது. நீர் இங்கு இருந்தால் உமது நண்பர் மோகனதாஸுக்குத் தான் அபகீர்த்தி' என்று சொல்லியும் அவர் பிடிவாதமாக, 'நான் எது எப்படியிருந்தாலும் இந்தச் சண்டையைத் தடுத்தே தீர்வேன்' என்று உறுதியுடன் கூறினர்.

அப்போது காப்டன் லோலன், 'அப்படியானல் உம்மைப் பலாத்காரமாக அப்புறப்படுத்துவது தவிர வேறு வழி எங்களுக்கு இல்லை' யெனக் கூறிக் கொண்டே திடீரென்று அவர்மீது பாய்ந்து அவரது கையிலிருந்த தடியைப் பிடுங்கிக் கொண்டான். உடனே அவனும் கோபாலருமாகச் சேர்ந்து அம் மைதானத்தின் வாயிலினருகில் இழுத்துச் சென்றனர். அப்போது அவர் தம்மை அவர்களிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயன்றும் முடியவில்லை. அப்போது அவர், 'மோகனதாஸ்! என்னை இவர்கள் அவமானப்படுத்தும் போது நீ இப்படியும் கைகட்டிக் கொண்டு நின்றிருக்கலாமா? எனக்கு யாரும் எவ்வித அவமானமும் இழைக்காதபடி நீ பார்த்துக்கொள்வதாகக் கூறியிருக்கிறாயே. அப்படியிருக்க நீ இப்போது சும்மா இருப்பதைக் காண எனக்கு ஆச்சர்யமாய் இருக்கிறது. இனி உன்னுடன் நான் எத்தகைய சம்பந்தமும் வைத்துக்கொள்ள முடியாது. சந்திரசேகரம் பிரபுவே! நீயே இவ்வாறு என்னை அவமானம் செய்யும்படி தூண்டினையே அது நியாயந்தானா? இப்போது எனக்கு உதவி செய்யமாட்டாயா? பின்னல் இதற்காக நீ

வருந்தவேண்டி வரும். ஆதலால் இப்போதே சரியாக நடந்துகொள்' என்று இருவர் பெயரையும் சொல்லிக் கூக் குரலிட்டுக்கொண்டிக்கும்போதே காப்டனும் கோபாலரும் அதை லட்சியம் செய்யாமல் செல்வநாதனை வாயிலின் அரு கில் இழுத்துச் சென்று தங்கள் கைக்குட்டையால் அவனை அவ்வாயிலின் கம்பியில் கட்டிவிட்டனர். அதைப் பார்த்து சந்திரசேகரம் பிரபு வயிறு புண்ணுகும்படி சிரித்தான். ஆனல் மோகனதாஸ், தன் நண்பர் இவ்வாறு அவமானப் படுத்தப்படுவதைச் சகியாதவன்போல் திக்பிரமையுடன் நின் ருனே யொழிய அச்சமயத்தில் ஒன்றும் செய்ய முடிய வில்லை.

காப்டனும் கோபாலரும் திரும்பி வந்ததும் மீண்டும் சண்டைக்குத் தயாராகும்படி தங்கள் கட்சிக்காரருக்குத் தெரிவித்தனர். காப்டன் தன் கைக்குட்டையை அசைத்து இருவரும் சுடலாம் என்று ஆக்ஞை யிட்டான். ஆனல் ஒரு வருடைய துப்பாக்கிதான் வெடித்தது. வெடித்த துப்பாக்கி சந்திரசேகரம் பிரபுவினுடையது. ஆனல் அது மோகன தாஸுக்குப் படவில்லை. காப்டன், மோகனதாஸினிடம், 'நீர் ஏன் சுடவில்லை?' என்று கேட்டான். அதற்கு அவன், 'சுடவேண்டு மென்பது என் அபிப்பிராய மல்ல. நான்தான் சந்திரசேகரம் பிரபுவுக்கு ஆத்திர மூட்டினேன். ஆதலால் அவன் சுட்டால் சரிதான்' என்றுன். அப்போது கோபா லர் குறுக்கிட்டு, 'மோகனதாஸ்! அதற்கு மேலொன்றும் பேச வேண்டாம். அவ்வளவு சொன்னது போதும்,' என்று கூறி விட்டு 'சந்திரசேகரம் பிரபுவுக்குத் திருப்திதானே' என்று அவனைப் பார்த்துக் கேட்டேன். அப்போது என்ன பதில் அளிப்பதென்று தெரியாமல் அப்பிரபு சிறிது நேரம் சிந்தித் தான். முதலில் சந்தோஷம்தான் என்று சொல்லி விடலா

மென நினைத்தான். ஆனால் நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டு விருந்தில் முகமூடியுடன் வந்து தன்னைச் சந்தித்த மாதைத் திருப்தி செய்துவிட்டு அவளது இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்து விட்டபடியால் அதற்கேற்றபடி ஏதாவது செய்யவேண்டுமென முடிவு செய்து கொண்டு, 'மோகனதாஸின் செயல் தைரியத்தை காண்பிப்பது அன்று. இரண்டாம்முறை ஒருவரையொருவர் சுட்டுக் கொள்வதைத் தடுக்கவே அவன் முதல் முறையிலேயே சுடாமல் இருந்து விட்டான் என்றுதான் நான் நினைக்கிறேன். ஆதலின் நான் திருப்தி யடையவில்லை' என்று பதில் கூறினன். அதற்கு காப்டன், 'சரி, அப்படியானல் சண்டையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டியதுதான்' என்று சொன்னன்.

அப்போது செல்வநாதர், தான் கட்டுண்டு கிடப்பதினின்றும் விடுவித்துக் கொள்ளப் போராடிக் கொண்டே, 'மோகனதாஸ்! சந்திரசேகரம் பிரபு! நீங்களிருவரும் செய்வது நன்றாக இல்லை. மறுபடியும் சண்டை போட்டால் அது வெறும் கொலைக் கொப்பாகும். இதைக் கொலைக்களம் என்று சொல்வேன்' என்று இன்னும் ஏதோ சொல்லி முடிப்பதற்குள் ஆத்திரத்தினலும் சிரமத்தினலும் அவரது தொண்டை அடைத்துக் கொண்டதால் மேற்கொண்டு ஒன்றும் பேச முடியவில்லை. இதற்குள் மோகனதாஸினிடமும் சந்திரசேகரம் பிரபுவினிடமும் புதிய கைத் துப்பாக்கிகள் கெட்டித்துக் கொடுக்கப் பட்டன. காப்டன் பழையபடி சமிக்ஞை செய்வதற்காக வெண்மையான கைக்குட்டையுடன் அவனுடைய இடத்தில் நின்று கைக்குட்டையை அசைத்தான். உடனே வெடி சத்தம் கேட்டது. இம்முறையும் ஒரு துப்பாக்கிதான் வெடித்தது. அதுவும் சந்திரசேகரம் பிரபுவினுடையதே. ஆனல் சென்ற முறையைப்போல் இம்

முறை சுட்டது வீணாகவில்லை. மோகனதாஸ் மீது அடி பட்டு அவன் அப்படியே மண்ணிற் சாய்ந்தான்.

அச்சமயம் செல்வநாதர் தன் முழுபலத்தாலும் முயற்சி செய்து தான் கட்டுண்டிருப்பதினின்றும் அறுத்துக் கொண்டு, 'ஐயோ, அவனைக் கொன்றுவிட்டீர்களே!' என்று கூச்சலிட்டுக் கொண்டே மத்தியில் ஓடிவந்தார். இதற்குள் காப்டன் லோலனும், கோபாலரும் மோகனதாஸைத் தரையினின்றும் தூக்கிக்கொண்டிருந்தனர். அங்கே டாக்டரும் நின்றிருந்தார். சந்திரசேகரம் பிரபுவும் துயரத்துடன் பார்த்தான். மோகனதாஸின் கண்கள் மூடப்பட்டிருந்தன. அவனது அங்கிகளெல்லாம் ரத்தமயமாய் இருந்தன. மூக்கினின்றும் மூச்சு வரவில்லை. அப்போது டாக்டர் செல்வநாதரைப் பார்த்து, 'அவன் இறந்துவிட்டான். இனி நீ இங்கு தங்கியிருப்பதில் பிரயோசனமில்லை,' என்றான். அதற்குச் செல்வநாதர், 'ஐயோ கடவுளே! இறந்துவிட்டானா? இறந்திருக்கவும் முடியுமா?' என்று கூறிக்கொண்டே பிரேதத்தின் பக்கத்தில் முழங்காலிட்டுப் பணிந்து இறைவனைப் பிரார்த்தித்தான். அப்போது கோபாலர் அப் பெரியவரருகில் சென்று மெதுவான குரலில் மற்றவர்களுக்குக் கேட்காதபடி, 'உனக்கு இந்த விஷயம் ஒன்றும் தெரியாது. இதோ இந்த சாவியை எடுத்துக் கொள். இதனால் மோகனதாஸின் காரியாலயத்திலுள்ள அவனது மேஜையைத் திறக்கலாம். அங்கே போனால் நீ செய்யவேண்டிய வேலைகளை அறியலாம். அந்த வேலையில் அசிரத்தையாக இராதே' என்று கூறிக்கொண்டே அவரிடம் தன்னிடமிருந்த சாவியைக் கொடுத்துவிட்டு சந்திரசேகரம் பிரபு, காப்டன் லோலன் ஆகியவர்களிடம் சேர்ந்துகொண்டான். கீழே விழுந்த பிரேதத்தினிடம் டாக்டரும் செல்வநாதரும் மட்டும் இருந்தனர். இதனால் கோபாலர் மோகன

தாஸ் விஷயத்தில் அசிரத்தையாக இருந்தானென்று கூறமுடியாது. அவன் மோகனதாஸ் நின்றிருந்த தன் வண்டியிடம்சென்று, வண்டிக்காரனிடம், 'நீ வண்டியை மைதானத்தின் நடுவில் செலுத்தி மோகனதாஸின் பிரேதத்தை வண்டியில் ஏற்றுவதில் உதவி செய்து பிறகு பெரியவர் செல்வநாதர் எப்படிச் சொல்கிறாரோ அப்படி நடந்துகொள்' என்று கட்டளையிட்டுவிட்டு அவன் காப்டன், சந்திரசேகரம் பிரபு ஆகியவர்களுடன் கலந்து கொண்டு அவர்கள் வண்டியிலேயே அவர்களுடன் சென்றான்.

## 41-வது அத்தியாயம்

### ஹேமவதி மாளிகையில் காட்சி

சந்திரசேகரம் பிரபுவுக்கும் மோகனதாஸுக்கும் துப்பாக்கிச் சண்டை நடந்த தினத்தின் இரவு சுமார் பத்தரை மணிக்கு உயரமான ஒரு மனிதன் பெரிய போர்வையால் உடம்பையும் முகமூடியால் முகத்தையும் மூடிக்கொண்டு கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையின் பக்கமாக நடந்துவந்தான். வழியில் சில போலீஸ்காரர்கள் அவனைச் சந்தித்தார்களென்றாலும், பிரபுக்கள் நடமாடும் அப் பிரதேசத்தில் இவ்வாறு யார் முகமூடியுடன் சென்றாலும், அதில் குறுக்கிடப் போலீஸாருக்கு அதிகாரமில்லாததால் அவர்கள் அந்த மனிதனையும் ஒன்றும் கேட்கவில்லை. அவனும் தாராளமாகப் போய் கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையின் வெளிக் கதவைத் தட்டினான். கதவும் உடனே திறக்கப்பட்டது. அவன் உள்ளே புகுந்ததும் கதவை மூடிக்கொண்டு தன் முகமூடியையும் போர்வையையும் அப்புறப்படுத்தித் தான் சந்திரசேக

ரம் பிரபு என்பதைக் காண்பித்தான். உடனே வாயில் காப்போனிடம் 'நான் இவ்வாறு முகமூடி அணிந்து வந்ததன் காரணத்தை நீ அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன். தினகரம் பிரபு வீட்டில் இருக்கிறாரா?' என்றான். அதற்கு அவன், 'இல்லை. அவர் இன்று முழுதுமே வீட்டில் காணோம்' என்றான். அதற்கு அப் பிரபு, 'சரி! நான் அவரை அவசரமாகப் பார்க்க வேண்டும். அவரது சமாசாரம் ஹேமவதி சீமாட்டிக்குத் தெரிந்திருக்கும். ஆதலால் நான் அச் சீமாட்டியைப் பார்க்க வேண்டும். அவர் தனியாக இருக்கிறாரா? அல்லது குமாரிகளுடன் இருக்கிறாரா தெரியவில்லையே,' என்றான். அப்போது வாயில் காப்போன், 'இல்லை. குமாரிகள் எங்கேயோ விருந்துக்குச் சென்றிருக்கின்றனர். சீமாட்டி தனியாகவே இருக்கிறார். இதோ இந்த ஆளை அனுப்புகிறேன். அவன் உங்களைச் சீமாட்டி இருக்கும் அறையில் விடுவான்' என்று கூறிவிட்டு ஆளையனுப்பினான். அவனும் சந்திரசேகரம் பிரபுவைச் சீமாட்டி தனியாக உட்கார்ந்திருந்த அறையில் கொண்டுபோய் விட்டு அவன் போய்விட்டான்.

சந்திரசேகரம் பிரபு ஹேமவதி உட்கார்ந்திருந்த ஆசனத்தின் அருகிலிருந்த மற்றொரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, 'இன்று இரவு என்னை இவ்வாறு இங்கே பார்ப்பதாக நினைத்திருக்க மாட்டாய்' என்றான். அதற்கு அவளும் நிதானமாகவும் பொறுமையுடனும் 'ஆம்; நான் எதிர்க்கவில்லைதான். மேலும் நீ இக்கோலத்தில் இப்படி வந்திருப்பதைக் காண ஆச்சர்யமாகவும் இருக்கிறது என்றாள். அவன் அவளை உற்றுப்பார்த்து, 'ஆச்சர்யமாகவா இருக்கிறது? நான் உன்னுடைய கட்டளையை நிறைவேற்றி விட்டேனல்லவா? ஆம்; ஒரு வார்த்தையும் தவறாமல் முடித்து வைத்தேன்,' என்று கூறினான். அப்போது ஹேமவதி சீமாட்டி ஆச்சர்ய

மடைந்தவள்போல், 'பிரபுவே! நீ என்ன கூறுகிறாய் என்பதே எனக்கு விளங்கவில்லை. இன்று காலை நீ துப்பாக்கிச் சண்டையில் யாரையோ கொன்று விட்டதாகக் கேள்விப் பட்டேன். அதற்காக உன் மூளை புரண்டிருக்கிறது போலும்' என்று சொன்னதும் அவனுக்கு அளவிலா ஆத்திர முண்டாய் விட்டது. ஆகவே அவன் தன் ஆஸனத்தை விட்டு எழுந்து அவள் மீது பாய்பவன்போல் நின்று 'சீமாட்டியே! நீ என்னை இப்படியும் ஏமாற்றலாமா? இப்போதும் நான் உன் விஷயத்தைச் சேவகர்களிடம் தெரிவிக்க வில்லையே. உன் குமாரனைக் காண்வந்ததுபோல் பாவனை செய்தல்லவோ இங்கு வந்திருக்கிறேன்' என்றதும் அவள் ஆத்திர மடைந்து தன் ஆசனத்தை விட்டு எழுந்து அடக்கமுடியாத கோபமுடையவளாய் அவன்மீது தன் முழுப் பார்வையையும் செலுத்தி, 'பிரபுவே! நீ சொல்வதொன்றும் விளங்கவில்லை. உன் தங்கையை என் குமாரனுக்கு விவாகம் செய்து கொடுப்பதென நிச்சயித்திருப்பதால் உன்னை இம்மாளிகையில் அனுமதித்தார்கள். இன்றேல் நீ இங்கு பிரவேசித்திருக்கவும் முடியாது. இரவில் இந்நேரத்தில் நீ இங்கே வந்து தாறுமாறாகப் பேசுவது சரியன்று; உடனே வெளியேபோய்விடு' என்று அதட்டிக் கூறினாள்.

அவள் அவ்வாறு கூறும்போது அவன் திக்பிரமையுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் பேசி முடித்ததும் அவன் அளவுகடந்த ஆத்திரமடைந்து, 'சீமாட்டியே! நீ நடந்துகொள்வது வெறுக்கத்தக்கதாக இருக்கிறது' என்றான். அப்போது அவள், 'எனக்கா அப்படிச் சொல்கிறாய்' என்று கூறிக்கொண்டே சேவகர்களை அழைக்கும் மணியை தட்டப்போனாள். இதற்குள் சந்திரசேகரன், 'இல்லை. முன்னரே அவமானப்படுத்தி யிருக்கிறாய். ஆளைக் கூப்பிட்டுவிட்டு

இன்னும் அவமானப்படுத்த வேண்டாம். ஏதேனும் மீறி நடந்துகொண்டால் உன்னை இங்கேயே கொன்றுவிடுவேன்' என்று பரபரப்புடன் கூறினன். இதனால் அவள் உண்மையிலேயே பயந்து மணியைத் தட்டாமல் போனதுடன், 'சரி தான். இன்று காலை நடந்த அசம்பாவிதத்தால் உன் மூளை புரண்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் உன்னுடன் கடுமையாக நடந்துகொள்வதில் பிரயோசனமில்லை' என்று கூறிக்கொண்டே நிதான மடைந்தவள்போல் தன் ஆசனத்தில் அமர்ந்தாள். சந்திரசேகரம் மட்டும் நின்றபடியே அவளது மனத்திலுள்ளதைத் தன் பார்வையாலேயே தோண்டி எடுப்பவன்போல் அவள் முகத்தைச் சிறிது நேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவனும் ஆத்திர மடங்கித் தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு, 'இன்று காலை நடந்த அசம்பாவிதம் என்று சொன்னயே, அது என்ன பொருள்?' என்று ஹேமவதியைக் கேட்டான்.

அதற்கு அவள், 'துப்பாக்கிச் சண்டையில் ஒரு ஆளைக் கொன்றுவிடுவது அசம்பாவிதமல்லாமல் வேறென்ன? நீ பேசுவது ஆச்சர்யமாக இருக்கிறதே' என்றாள். அப்போது அவன், 'சரி பேசுவதை நிறுத்து. இதோ பார்; வைரப் பொத்தான் உன்னுடையதுதானே' என்று கேட்டுக் கொண்டே தொப்பியில் சொருகியிருந்த வைரப் பொத்தானைக் காண்பித்தான். அதை அவள் புதிதாகப் பார்ப்பவள்போல் பார்த்து, 'இல்லை. இது என்னுடையதல்ல. இதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது' என்றாள். பிறகு அவன் தன்னை அவ் விருந்துக்கு வரும்படி அறிவித்த கடிதத்தைக் காண்பித்து, 'இதுவும் உனக்குத் தெரியாதா?' என்று கேட்டான். அப்போது அவள் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, 'சீ! இதென்ன கேள்வி-உன் கடிதப் போக்கு வரத்துகளெல்லாம்

எனக்குத் தெரியவேண்டிய அவசியமென்ன ?' என்றாள். அப்போதும் அவன் விடாமல் பிடிவாதமாக மோகனதாஸ் என்று மட்டும் எழுதி யிருந்த ஒரு துண்டுக்காகிதத்தைக் காண்பித்து, 'இதுவும் உனக்குத் தெரியாதா ?' என்று கேட்டான். அப்போதும் அவள் ஒன்றும் அறியாதவள்போல், 'இதென்ன ? தொல்லையாய் இருக்கிறது? உன் மூளை புரண்டிருக்கிறதே என்பதற்காக இதுவரை பொறுத்துக் கொண்டிருந்தேன். இனி என்னால் முடியாது. அதை யெல்லாம் எனக்குக் காண்பிக்க வேண்டாம். எனக்கு ஒன்றுமே தெரியாது' என்று கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

அப்போது சந்திரசேகரம் அடக்க முடியாத கோபத்தை யடைந்து, 'சீமாட்டியே ! நீ இவ்வாறு என்னை ஏமாற்றப் பார்க்கலாம். ஆனால் நீ இதில் வெற்றி யடைய முடியாது என்னை எந்த ஒரு மாதும் தன் கருவியாகக்கொண்டு காரியத்தை முடித்துக்கொண்ட பின் என்னை உதறித் தள்ளிவிட முடியாது. அதிலும் நீ என்னால் காரியத்தை முடித்துக் கொண்ட பின்னர் அதை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கிறாய். நீதான் எனக்கு அக்கடிதத்தையும் வைரப்பொத்தானையும் மோகனதாஸ் என்னும் பெயரையும் அத்துடன் பெருந் தொகையையும் அனுப்பியது என்பதில் சிறிதும் சந்தேக மில்லை' என்று திடமாகக் கூறினான். அப்போது அச்சீமாட்டி அசட்டுச் சிரிப்புடன், 'ஓஹோ ! பிரபுவே ! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. உன் சினேகிதர்களும் உன்னைப் பார்க்காதபடி செய்துவிட வேண்டியதுதான்' என்று கம்பீரமாகக் கூறினாள்.

அப்போது சந்திரசேகரம் பிரபு அதிக ஆத்திரத்துடன், 'மாதே ! இந்த உலகத்தில் மிகக் கொடிய ஒரு பெண் எவ்வளவு அக்ரமம் செய்ய முடியும் என்பதற்கு உதாரணமாக

இப்போது நீயே விளங்குகிறாய். நீ என்னை ஏமாற்றப்பார்க்கலாம். ஆனால் அது முடியாத காரியம் எனக்கு மோகனதாஸைக் கொல்லும்படி கட்டளை யிட்டது நீதான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. உன் இரகசியத்தைக் கண்டுபிடிக்க என்னால் முடியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயோ. உனக்கும் மோகனதாஸுக்கு மிடையில் ஏதோ விரோதம் இருப்பதாக நகர் முழுதும் வதந்தி இருக்கிறது. அவன் உன்னை அவமானப்படுத்தி விட்டதாக நீயே உனக்கு வேண்டியவர்களிட மெல்லாம் சொல்லி விட்டிருக்கிறாயே. இதனால் அவனை அழித்துவிட வேண்டுமென்னும் எண்ணம் உனக்கு இருக்கிறதென்று நன்றாகத் தெரிகிற தல்லவா? இதனாலெல்லாம் நீயே பாஞ்சால ராஜகுமாரிபோல் வேடம் தரித்து நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டு விருந்தில் என்னைச் சந்தித்து என்னிடம் அதிக காதல் உள்ளவள்போல் நடித்து மோகனதாஸைக் கொல்லும்படி கட்டளை யிட்டாய் என்று விகசிதமாகத் தெரிகிறது' என்று விவரமாகக் கூறினான். அதற்கு அவள், 'ஐயா, பிரபுவே! நீ என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய் என்பதை தெரிந்து கொள்ளலா மென்றே இதுவரை நீ சொன்னதை யெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்போது விஷயம் தெரிந்து விட்டது. தவறுதலாக யாருடைய விஷயத்தையோ என்னுடைய தென்று கருதி யிருக்கிறாய் என்பது தெரிந்தது' என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் பரபரப்புடன், 'இல்லை, இல்லை. நீ சொல்வது தவறு. நான் விருந்தில் சந்தித்த பெண்மணி யாரோ என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் அம்மாதின் விரோதி மோகனதாஸ் என்று எனக்கு அறிவிக்கப்பட்டதும் அப்பெண்மணி நீயே என்று நிச்சயித்து விட்டேன். மோகனதாஸை நீ வெறுக்கிறாய் என்பதால் மட்டும்

நான் சந்தித்த அப்பெண்மணி நீயே என்று கூறி விடவில்லை. உன் உயரமும், தோற்றமும், குரலும் நீதான் அம்மாது என்பதை ருஜூப் படுத்துகின்றது. நீயே எனக்கு கொலை உத்தரவு கொடுத்தவள் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை' என்று உறுதியாகச் சொன்னான்.

அதற்கும் அச்சீமாட்டி அஞ்சாமல், 'உன்னுடைய மூளை புரண்டிருக்கிறது என்று நான் சொன்னேனல்லவா? இவ்விஷயம் ஒன்றுமே எனக்குத் தெரியாது. இவ்வாறெல்லாம் நீ பேசிக்கொண்டிருப்பதை நான் சகியேன், உடனே வெளியே போய் விடு' என்று மிரட்டியதுடன் அந்த விஷயமே அவளுக்குத் தெரியாததுபோல் முகமும் தெளிவுடன் வைத்துக் கொண்டிருந்தால் அவன் ஒருகால்தான் நினைத்தது பிசகோ என்று நினைத்துச் சொற்பநேரம் திக்கு முக்காடினான். ஆனால் இரண்டொரு நிமிஷங்களுக்குள் திடீரென்று ஏற்பட்ட சந்தேகம் நீங்கி, அவளே தனக்குக் கட்டளை யிட்டவள் என்னும் திடமான நம்பிக்கையுடன், 'சீமாட்டியே! உனக்காக நான் ஒரு கொலைக்காரனானேன். மோகனதாஸின் ஆன்மா என் ஹிருதயத்தின்மீது உட்கார்ந்து என்னை இம்சிக்கிறது. இதற்கெல்லாம் தக்க சன்மானம் பெறாமல் நான் திரும்பிப் போக மாட்டேன். நீயே இன்ன சன்மான மளிப்பதாக முன்னாடியே வாக்குறுதி யளித்திருக்கிறாய். நீ உன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக என்னிடம் அளவிலாக் காதல் கொண்டிருப்பதாகக் கதை கட்டி விட்டாய்போ லிருக்கிறது. அதையும் முட்டாளாகிக் நான் உண்மை யென்றே நம்பி விட்டேன். ஒரு பெண்ணாகிய உன் ஹிருதயத்தில் இவ்வளவு சூழ்ச்சியும் கொடுமையும் இருக்குமென்று நான் நினைக்கவேயில்லை. எப்படியோ நான் அதை நம்பி உன் விரோதியாகிய மோகனதாஸைக்

கொன்று விட்டேன். அப்பாவம் என்னைச் சூழ்ந்துகொண்டு கலக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. இப்போது நீ உன் இன்பத்தை அனுபவிக்க அனுமதி கொடுத்தால் அக் கலக்க மெல்லாம் நீங்கி விடும். உண்மையிலேயே நீ என்னைக் காத லிக்கவில்லை யென்றால் நான் அதற்குத் தக்கபடி உன்னைப் பழிவாங்கி விடுவேன் என்பது நிச்சயம்' என்று வீரகர்ஜனை செய்தான். அதைக்கேட்ட அவள், 'ஐயோ! ஒரு பைத் தியக்காரனாகிய நீ இங்கு இருப்பதைக்காண நான் கவலைப் படுகிறேன் உன் துர்அதிர்ஷ்ட நிலையைக் கண்டே இவ் வளவு கோமாகியும் பொறுமையுடன் இருக்கிறேன். இந்த அனுதாபங்கூட இல்லாவிட்டால் உன்னை எப்போதோ துரத்தி விட்டிருப்பேன்' என்று கூறினாள்.

அப்போது சந்திரசேகரம் பிரபு, 'அனுதாபமா? வேண் டாம். பிறருடைய அனுதாபத்துக்கு ஆளாகவேண்டிய நிலை மையில் நான் இருக்கக்கூடாதென்பதே என் அவா. சீமாட் டியே! நான் இதுவரை எவ்வளவோ அயோக்கியனாக இருந் தேன். நான் செய்யாத அக்கிரமங்களேயில்லை யென்றும் கூறலாம். ஆயினும் இப்போது முதல் நான் பெரிய கிரிமி னல் குற்றவாளியாகவும் ஆகிவிட்டேன். அதுதான் என் மனதை அதிகம் வாட்டுகின்றது. அப்படிப்பட்ட நிலைமையி னின்றும் ஆறுதல் ஏற்படவேண்டுமாயின் நாம் இவ்வுலகத் தையே மறந்திருக்கும்படியான இனிய மதுபானமாவது, காம உணர்ச்சி மீறிய பெண்களைக் கட்டியணைத்து சாச சல் லாபமாடுவதாவது அவசியம் வேண்டும். இதில் இரண்டா வது சுகத்தைக் கொடுக்க உன்னால் முடியும். நீயும் அவ்வாறே வாக்குறுதி யளித்திருக்கிறாய்' என்று கூறியதும், ஹேமவதி சீமாட்டி தலையை அசைத்துக் கொண்டே, 'ஐயோ, இளை ஞனே! உனக்கு என்ன நேருமோ தெரியவில்லையே, நீ

என் குமாரனின் நெருங்கிய சிநேகிதனுகவும், என் குமாரனுக்கென நிச்சயிக்கப்பட்ட பெண்ணின் சகோதரனுகவும், என் சிநேகிதையும் மரியாதைக் குரியவளுமான மதனவல்லிச் சீமாட்டியின் பந்துவாகவும் இருக்கிறாய். மேலும் இன்று காலை நீ இழைத்துவிட்ட கொடுமைக்காக அதிகம் வருந்துவதாகவும் தெரிகிறது' என்று சொல்லி முடிப்பதற்குள் சந்திரசேகரன் அதிக கோபத்துடன், 'ஓ! என்னிடம் அப்படியெல்லாம் பேசாதே. நான் இதுவரை பைத்தியக்காரனல்லவென்றாலும் இப்போது நீ என்னை பைத்தியக்காரனுக்கிவிடுவாய் என்று தோன்றுகிறது. கடவுள் கிருபையால் நீ மிக அழகுள்ளவளாக இருக்கிறாய். நேற்றுக் காலை முதல் நான் அடிக்கடி உன் அழகைப்பற்றிச் சிந்தித்து சந்தோஷப்படுவதுண்டு. ஆ! இப்போது எனக்குத் தோன்றுவது போல் அவ்வளவு அழகாக உன் முகம் இதற்குமுன் இருந்ததில்லை. நீ இப்போது என்னை ஏமாற்றவும் மோசம் செய்யவும் அயோக்கியத்தனமாக நினைத்தும் என் மனம் மட்டும் உன்னிடத்திலேயே நாடி இருக்கிறது' என்று கூறிக்கொண்டே அளவுகடந்த சந்தோஷத்துடன் தனக்கும் தெரியாமல் கலகலவென்று சிரித்தான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி தன் சோபாவைவிட்டு எழுந்து நின்று பொறுமையும் பெருந்தன்மையு முடையவள் போல், 'இப்போது நமது சம்பாஷணை முடியட்டும்,' என்றாள். அவளுக்கு அந்தரங்கத்தில் சிறிது பயம் இருந்தபோதிலும் வெளிப் பார்வைக்கு அச்சமில்லாதவள்போலும் அவனிடம் அனுதாப முடையவள்போலும் காட்டிக் கொண்டாள். அச்சமயம் சந்திரசேகரன் கோபத்துடனும் துக்கத்துடனும், 'என்னை இப்படியும் நடத்துவதென்று நீ முடிவு செய்திருப்பது பொருந்துமா? மாதே! உனக்காக நான்

ஒரு கொலைக்காரனாகவும் ஆனேன். மோகனதாஸைக் கொல்லும்படி கட்டளையிட்டது நீதான் என்பதை நான் அறிவேன். ஆதலினால்தான் உன் குமாரனிடம் இந்தச் சங்கதியைக்கூடச் சொல்லவில்லை. உனக்காக நான் இவ்வளவு கஷ்டப்பட்டும் 'நீ இப்போது' என்று கூறி முடிக்குமுன், சீமாட்டி மறுபடியும் பிரபுவே! நமது சம்பாஷணை இத்துடன் முடியட்டும்,' என்று கண்டிப்பாகக் கூறினாள்.

அதற்கு அவன், 'இல்லை; நமது சம்பாஷணை முடியலாகாது. வீண் பேச்சுகளை வேண்டுமாயினும் நிறுத்திக் கொள்வோம்' என்று கூறிக்கொண்டே சீமாட்டியைக் கட்டித் தழுவிக்கொள்ளும் பொருட்டு நீட்டிய கரங்களுடன் அவள்மீது பாய்ந்தான். அப்போது ஹேமவதி சீமாட்டி தனக்குந் தெரியாமல் கீச் என்று கத்திக் கொண்டே ஆளை அழைக்கும் மணியைத் தட்டப்போனாள். ஆனால் அதற்குள் அவ்வறையின் கதவும் திடீரென்று எதிர்பாராத வகையில் திறக்கப்பட்டு மந்தரை என்னும் வேலைக்காரி அதிக கோபத்துடன் கூடிய முகத்தோடு அறையில் புகுந்தாள். அம்மாது திடீரென்று அங்கு வந்ததால் அதிக சந்தோஷப்படுவளேபோல் அவளைப் பார்த்து, 'மந்தரை! என்னை இந்த அபாயத்தினின்றும் காப்பாற்று' என்று கத்தினாள். ஆனால் அவள் கோபத்துடன் வந்திருக்கிறாள் என்பதைச் சீமாட்டி அறியவில்லை. அவ்வேலைக்காரியும் சந்திரசேகரம் பிரபுவை அங்குக் கண்டதும் ஆச்சர்யத்துடன், 'ஓ, இதென்ன ஆச்சர்யம். இன்று காலை மோகனதாஸைக் கொன்றுவிட்டவன் இங்கு இருக்கிறானே' என்று திக்பிரமையுடன் கூறினாள்.

அப்போது, சீமாட்டியை அணைத்துக்கொள்வதற்காக நீட்டப்பட்ட சந்திரசேகரம் பிரபுவின் கரங்கள் திடீரென்று பாரிசவாயு கண்டவன் கைகள்போல் கீழே தொங்கலாயின.

என்ன செய்வதென்று தோன்றாமல் சில நிமிஷங்கள் பிரமையுடன் நின்றான். பலாத்காரமாக அச்சீமாட்டியைக் கட்டியணைய அவனுக்குத் தைரியம் வரவில்லை. அந்த கோபத்தில் ஏதேனும் கலகம் செய்ததாகப் போலீஸ் உதவி கொண்டு கைது செய்துவிட்டால் என்ன செய்வதென்று அஞ்சினான். ஆகவே அவன் சமயத்துக்குத் தக்கபடி நடந்துகொள்வதே புத்திசாலித்தனமென்று நினைத்து சீமாட்டியின் அருகில் சென்று மெதுவான குரலில் 'நாம் விரைவில் மீண்டும் சந்திப்போம்' என்று சொல்லிவிட்டு அவ்வறையை விட்டுச் சென்றதுடன் அம்மாளிகையிலேயே நிற்காமல் ஓடிவிட்டான்.

அவன் சென்ற பிறகு சீமாட்டி மந்தரையைப் பார்த்து, 'நீ சமயத்துக்கு இங்குவந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். உனக்கு என் வந்தனம் உரியதாகுக,' என்றாள். அப்போது அக்கிழவி அதிக கோபத்துடன், 'என் நிலைமைக்கு வந்தனமும் வேண்டுமோ? இங்கு நடப்பது என்ன தெரியும்? நான் வந்தனத்துக்காக வரவில்லை. உனக்கு மிகவும் கெட்டகாலம் வந்திருக்கிறதுபோலத் தோன்றுகிறது. யார் பார்த்தாலும் உன்னைக் காதல் லீலைக்கு அழைக்கிறார்கள். முதலில் பாவம் கொல்லப்பட்ட மோகனதாஸ் உன்னை நாடினான். இப்போது அவனைக் கொன்ற சந்திரசேகரன் உன் இன்பத்தை அனுபவிக்கப் பார்க்கிறான். இதுவும் ஒரு வேடிக்கையே. அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்னுடைய நிலைமையைப் பற்றிச் சொல்லிக்கொள்ளத்தான் வந்தேன். நாளுக்குநாள் எனக்கு இம்மாளிகையில் அவமானம் அதிகமாகிறது. உன்னுடைய பிள்ளையும் பெண்களும் என்னை அலட்சியமாக நடத்துவதால் இதர வேலைக்காரர்களும் லட்சியம் செய்யாமல் என் சொல்லைக் கேட்பதில்லை. அலட்சியம் செய்கிறார்கள். வண்ணாத்தியும் சமையல்காரனும்கூட என் பேச்சைக்கேட்டு

அதன்படி நடக்கமாட்டேன் என்கிறீர்கள். நான் உன் அனுமதியையும் பெறவேண்டும் என்கிறீர்கள். ஆகையால் இனி என்னல் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. ஏதாவது ஒருவிதத்தில் இதை முடிவுக்குக் கொண்டுவந்து விடுவதென்று தீர்மானித்திருக்கிறேன்' என்று அதிக துக்கத்துடன் கூறினுள்.

அதைக்கேட்டதும் பயமடைந்த ஹேமவதி சீமாட்டி சிறிது அக்கரையுடன் கேட்பவள்போல், 'மந்தரை! எந்த வழியில் நீ இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதென நினைத்திருக்கிருய். அதை எனக்குத் தெரிவித்துவிடு' என்று ஆர்வத்துடன் கேட்டாள். உடனே அக்கிழவியும், தன் மனதில் நினைத்ததைச் சொல்ல ஆரம்பித்து, ஆர்வத்துடன் சொன்னதில் 'நான் என்ன நினைத்திருக்கிறேன் என்பதைச் சொல்லி விடுகிறேன். கேள். இப்போதே நான் இந்த மாளிகையில் ஊழியம் செய்யும் எல்லாரையும் இங்கே உன்னிடம் அழைத்து வருவேன். நீ அவர்களெல்லாம் என் கட்டளையின்படி அதாவது என் கட்டளையை உன் கட்டளையாக மதித்து நடக்க வேண்டுமென அவர்களிடம் கூறவேண்டும். அதுதான் நான் இப்போது செய்யப்போகிறேன்' என்றுள். அப்போது ஹேமவதி சீமாட்டி, தன் படாடோபத்துக்கு ஏற்றதாயில்லாத முறையில் அடக்கத்துடன் மெதுவான குரலில், 'அப்படியே ஆகட்டும், உன் இஷ்டப்படியே செய்வோம். ஆயினும் வேலைக்காரர்களெல்லாம் இங்கு வரும்போது நீ சிறிது பொறுமையாகவும் நிதானத்துடனும் இருந்தால் நன்றாக இருக்கும்' என்று கேட்டுக் கொண்டாள்.

சீமாட்டி திருப்திகரமாக நடந்துகொண்டதால் சந்தோஷமடைந்த அக்கிழவி, 'ஓ! அப்படியானுல் நீ என்

யோசனைக்கு எதிராக இல்லை யென்று தெரிகிறது. நான் விரும்புவதெல்லாம் என்னைச் சௌகரியமாக வைக்கவேண்டு மென்பதே' என்றாள். அப்போது சீமாட்டி, 'அப்படியே சௌகரியமாக வைக்கலாம். இப்போது உன் அதிகாரம் சரி யாக ஸ்தாபிக்கப்படவில்லை யென்பதை நானும் அறிகிறேன். நான் எல்லா வேலைக்காரர்களையும் அழைத்து உன்னிடம் இனிமேல் அவர்கள் மரியாதையாக நடந்து கொள்ளும்படி சொல்லிவிடுகிறேன். ஆனால் இப்போது இரவு அதிக நேர மாகிவிட்டதால் உடனே அவ்வாறு செய்வது யுக்தமாக இல்லை. விடியற்காலையில் எழுந்திருக்க வேண்டிய சேவகர்கள் இப்போது படுக்கைக்குப் போய்விட்டிருப்பார்கள். நாளை காலை ஆகாரம் முடிந்ததும் உன் இஷ்டப்படி செய்துவிடு கிறேன். அதுதான் குடும்ப காரியங்களைக் கவனிப்பதற்குச் சரியான சமயமாகும்,' என்றாள்.

அதைக்கேட்டுத் திருப்தியடைந்த அம்மாது, 'சரி! என் யோசனையை நீ சரியானபடி ஒப்புக்கொண் டிருப்பதால் நாளை காலை வரையில் பொறுத்துக்கொள்வதில் எனக்கொன் றும் கஷ்டமில்லை' என்றதும் சீமாட்டி அவளை இன்னமும் அதிகமாகச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத் துடன், 'நாளை காலை அவர்களை யெல்லாம் வைத்துக்கொண்டு நீ அடிக்கடி என்னிடம் அவர்களைப்பற்றிப் புகார் சொன் னதாகப் பல புகார்களைப்பற்றி விவரிக்கின்றேன். அதனால் அவர்கள் உனக்கு நான் சகல அதிகாரங்களையும் கொடுத்திருக் கிறேன் என்பதை உணர்ந்து கொள்வார்கள்' என்றாள். அத னால் அதிக சந்தோஷமடைந்த மந்தரை, 'ஆம், நீ சொல்வது சரிதான். உன்னுடைய உண்மையான வேலைக்காரியை யாரேனும் கௌரவக் குறைவாக நடத்தினால் நீ அதைப் பார்த்துக்கொண் டிருக்கமாட்டாய் என்பது எனக்குத் தெரி

யும். நான் சில தினங்களாக இந்த மனக்கவலையால் சரியாக வும் தூங்கவில்லை. இன்று நிம்மதியாகத் தூங்குவேன். உன்னைக் கடவுள் காப்பாற்றுவாராக. நான் போய்வருகிறேன்,' என்று சொல்லிவிட்டு அவள் அவ்வறையைவிட்டுப் போய் விட்டாள்.

அவள் சென்ற பிறகு ஹேமவதி சீமாட்டி அங்கு தனியாக இருந்ததால் அவளுக்குப் பற்பல சிந்தனைகள் தோன்றலாயின. நடுநிசியில் அம்மாளிகையின்முன் ஒரு வண்டி வந்து நின்றது. வெளியில் விருந்துக்காகச் சென்றிருந்த ராஜேஸ்வரியும் கற்பகமும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் களைப்படைந்து அயர்ச்சியுடன் வந்ததால் வீட்டை யடைந்ததும் தங்கள் அறைக்குச் சென்று தூங்கிவிட்டார்கள். தினகரம் பிரபுவோ அன்றிரவு முழுதும் வீட்டுக்கு வரவில்லை. அவன் நடிகமாது கமலகுமாரியின் நேசத்தைப் பெற்றபின் பெரும்பாலும் வீட்டில் தூங்கியதே யில்லை. அவளுடன் களியாட்டங்களை ஆடுவதிலேயே காலங்கழிப்பதில் சந்தோஷமுடையவனாக இருந்தான். ஹேமவதி சீமாட்டியின் குமாரிகள் வீட்டுக்குத் திரும்பிய பின்னர் அச்சீமாட்டியும் தன் படுக்கை யறைக்குச் சென்று தூங்கிவிட்டாள்.

அடுத்தநாள் காலை அம்மாளிகையில் ஒரு போாச்சர்யம் காணப்பட்டது. அது என்னவென்றால் மணி ஒன்பதாகியும் வேலைக்காரர்களெல்லாம் வந்திருந்தும் மந்தரைமட்டும் வரவில்லை. தினசரி அவள் தன் அதிகாரத்தை நிலைநாட்டும் பொருட்டு காலை சீக்கிரத்திலேயே வந்து இரவு ஏழு மணி வரையிலும் எல்லாரையும் கண்டபடி வேலை வாங்கியும், அனைவர்மீதும் ஏதேனும் குற்றங்களைச் சுமத்திக்கொண்டும், பலருடனும் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டும் இருப்பாளாதலால் அன்று அவள் வாராததால் பல சேவகர்களும் சந்தோ

ஷப்பட்டார்கள் மணி பத்து ஆனபிறகும் அவள் வாராத தால் அச் செய்தியை ஹேமவதி சீமாட்டியிடம் தெரிவித்து விடுவதே நலம் என வேலைக்காரர்கள் கருதினார்கள்.

ஹேமவதி சீமாட்டி தன் இரு குமாரிகளுடன் காலை ஆகாரத்துக்கு உட்கார்ந்து கொண்டிருந்தபோது மந்தரை வேலைக்கு வரவில்லை யென்னும் செய்தி அவளுக்கு அறிவிக்கப்பட்டது. பார்வதி என்னும் அழகிய மாதான வேலைக்காரிதான் இச்செய்தியை அங்கு அறிவித்தாள். அதைக் கேட்டதும் சீமாட்டி, 'பாவம்! அவளுக்கு உடம்பு அசௌகரியம்போலும்!' என்று சொல்லிக்கொண்டே மாடிக்குச் சென்று அவள் படுத்துக்கொள்ளும் அறையின் கதவைத் தட்டும்படி கூறினாள். பார்வதி எஜமானியின் கட்டளையை மீறத் துணியவில்லை. ஆயினும் அவள் கற்பகத்தின் அந்தரங்க விஷயங்களை அறிந்தவளாய் இருந்ததால் மந்தரைக்கு அதிகமாகப் பயப்படவில்லை யாதலால் தைரியமாக அவளை எழுப்பத் துணிந்தாள். மாடிக்குச் சென்ற அவள் உடனே திரும்பி வந்ததில் சவம்போல் வெளுத்த முகத்துடனும் பீதியுடனும் கீழே வந்ததால் ஹேமவதி சீமாட்டி பரபரப்புடன், 'என்ன விசேஷம்? என்ன ஆபத்து நேர்ந்தது?' என்று கேட்டாள். அவளும் சிறிது தைரியமடைந்து, 'ஐயோ, மந்தரை செத்துப்போனாள்' என்று கூறினாள். அதைக்கேட்ட சீமாட்டி தன் ஆசனத்தைவிட்டு எழுந்து, 'ஐயோ, செத்துப் போனாளா? அவள் எவ்வளவுதான் குற்றமுள்ளவளாயினும் நம்பிக்கையும் அபிமானமு முடையவளாக இருந்தாள்,' என்று கூறிக்கொண்டே தன் குமாரிகளுடனும் பார்வதியுடனும் மந்தரை படுத்திருந்த அறைக்குச் சென்றாள். சீமாட்டி மந்தரையின் முகத்தின்மீது கைவைத்துப் பார்த்து, 'ஓ! பனிக்கட்டிபோல் உடம்பு ஜில்லிட்டு விட்டது. அவள்

பலமணி நேரத்துக்கு முன்பே இறந்துவிட்டிருக்கவேண்டும் ஐயோ பாவம்!' என்றாள்.

மந்தரை இறந்துபோன செய்தி விரைவில் மாளிகை முழுதும் பரவிவிட்டது. ஆயினும் அவள் இறந்துவிட்டாள் என்பதற்காக அம்மாளிகையில் யாருமே துக்கப்படவில்லை. ஆனால் ஹேமவதி சீமாட்டி துக்கப்படுபவள்போல் காணப்பட்டாள். கற்பகம்மட்டும் கண்ணீர் சொரிந்தாள். ராஜேஸ்வரி துக்கப்படவுமில்லை. துக்கப்படுவதாகக் காட்டிக்கொள்ளவுமில்லை. மரண விசாரணை செய்தவர்கள் அவள் ஆயுள் முடிந்து கடவுள் கட்டளைப்படி இறந்துவிட்டாள் என முடிவு செய்துவிட்டார்கள். ஏனெனின் அவள் தற்கொலை செய்துகொண்டிருப்பாள் என நினைக்க எத்தகைய காரணமும் இல்லை. யாராவது கொன்றிருப்பார்களோ என்றால் கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையில் அவ்வாறு செய்யக்கூடியவர் யார் இருக்க முடியும் என்று கருதினார்கள். ஆகவே இறுதியாக அவள் காலம் முடிந்து இறந்துவிட்டாள் என முடிவு கூறிவிட்டனர். இவ்வாறாக மந்தரையின் உலக நாடகம் முடிந்தது. அவள் தன் அதிகாரத்தை அம்மாளிகையில் நிலைநிறுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் எல்லாச் சேவகர்களுடனும் சண்டையிட்டுக்கொண்டும், ஹேமவதி சீமாட்டியை மிரட்டிக்கொண்டும் வந்த அவள் கடைசியில் மண்ணோடு மண்ணாகச் சாய்ந்தாள். இதனால் எப்படிப்பட்டவர்களும் ஒருநாள் இறந்து மண்ணாகவேண்டியிருப்பதாலும், அத்தகைய மரணகாலம் எப்போது என்று தெரியாமையாலும் இவ்வுலகில் இருக்கும் சொற்ப காலத்திலாவது சகோதர மானிடர்க்கு உதவி செய்து எல்லாராலும் நல்லவர் என்று பெயர் எடுக்கும்முறையில் வாழ்க்கையை நடத்துவதே அறிவுடைமை யாகும். அதுதான் பல நூல்களைப் படிப்பதன் பயனுமாகும்.

## 40-வது அத்தியாயம்

### ஆச்சர்யக் கடிதம்

இப்போது நாம் கோமில்லாவிலுள்ள சமுத்திர விலாச மாளிகையில் அடைபட்டுக் கிடக்கும் கோகிலத்தைக் கவனிப்போம். ஏதோ ஒருவிதமான சப்தத்துடன் தோன்றிய உருவத்துடன் அவள் தப்பித்துச் செல்ல முயன்றும் அகப்பட்டுக் கொண்ட இரவு கழிந்து மூன்று தினங்களாயிருந்தன. அம்மூன்று நாளும் அவள் தர்மலிங்கம் பிரபுவைப்பற்றிய தகவல் எதையுமே அறியாததால் அவன் ரத்னபுரிக்கு ஏதேனும் வேலையாகப் போயிருக்க வேண்டுமென்றும், அல்லது யோசித்து முடிவுக்குவர ஒரு தவணை கொடுத்திருக்கலாமென்றும் நினைத்தாள். அவள் அதே யறையில் தங்கி இருந்தாள். அம்புஜம் அவளது சௌகரியத்தைக் கவனித்து வந்தாள். மங்களம் எங்கு இருக்கிறாள் என்பதே தெரியவில்லை. அவளது படுக்கை யறையின் சுவற்றில் ஒரு இரகசியக் கதவு வைக்கப்பட்டிருக்கிறதென்பது அன்று அவ்வுருவத்தால் காண்பிக்கப்பட்டுத் தெரிந்ததல்லவா? அது அந்த சுவற்றில் பக்குவமாக அமைக்கப்பட்டிருந்தபடியால் அதுவரை அவளுக்குத் தெரியாமல் இருந்ததில் ஆச்சர்ய மொன்று மில்லை. அது இருக்கிறதென்று அவளுக்குத் தெரிந்ததும் மறுநாட் காலை அவள் அதைத் தேடிப்பார்த்து அதன் அமைப்பைக்கண்டு ஆச்சர்யப்பட்டாள். அது இருக்கிற இடம் அவளுக்குத் தெரிந்துவிட்டதால் அவள் அதன்பிறகு இரவில் படுக்கை யறையில் படுத்துக்கொள்ளாமல் ஆடைகளை யணியும் அறையில் படுத்துக்கொண்டு படுக்கை யறையைப் பத்திரமாகப் பூட்டி விடு

வாள். அந்த ஆடைகளை யணியும் அறையின் சுவற்றிலும் இப்படி ஏதேனும் இரகசியக் கதவு இருக்குமோ என்று நினைத்து தேடிப்பார்த்தாள். ஒன்றும் அகப்படவில்லை. அத்தகைய கதவு ஒன்று இருந்தால் அதன் அமைப்பு எப்படியிருக்கு மென்பதை அவள் அறிவாளாதலால் இம்முறை சாமர்த்தியமாகவே தேடி, அவ்வாறு ஒன்றுமில்லை யென்று முடிவு செய்தாள். ஆகவே ஆடைகளை யணியும் அறையில் தனக்கு எவ்வித பயமும் இல்லை என்னும் தெளிவுடன் தைரியமாக இருந்து வந்தாள்.

பாவம், கோகிலம் அந்த மாளிகையில் அடைபட்டிருந்த காலத்தில் அவள் எவ்வளவு துக்கப்பட்டிருப்பாள் என்பது பற்றி அதிகம் கூறத் தேவையில்லை. அவள் தன் தாய், சகோதரன் இவர்களைப்பற்றி நினைத்துக்கொண்டால் ஓவென்று அழுவாள். அங்கிருந்து தப்பித்துக்கொண்டு போய்விடலாமென்னும் நம்பிக்கையே அவளுக்கு இல்லாமற் போய்விட்டது. அவள் அடைபட்ட இடம் பக்காச் சிறையாக இருக்கிறதென்றும், மேலும் அக்கட்டடத்தின் ஒரு பகுதி பைத்தியக்கார ஆஸ்பத்திரியாக உபயோகப்படுவதால் அவள் என்னதான் கூக்குரலிட்டு அழுதபோதிலும் அது பைத்தியக்காரர்களின் அழுகையென்றே வெளியில் செல்வோர் கருதுவார்களென்றும் தெரிந்துகொண்டாள். ஆகவே அவள் கதி என்ன? தர்மலிங்கம் பிரபுவின் எண்ணம் நிறைவேறி அவள் அக்கட்டடத்தினின்றும் வெளியேறும்போது கற்பு நிலையினின்றும் தவறியும் அசுத்தப்படுத்தப்பட்டுமே வெளியேற நேரிடுமென்றும் நினைத்துத் துக்கப்பட்டாள். தன் துக்கத்தைப்பற்றிமட்டும் நினைத்தாளா? இல்லை, தன்னை வெளியே அழைத்துச்செல்ல திடீரென்று தோன்றிய ஒரு உருவத்தின் ஞாபகமும் அவளுக்கு அதிகமாக இருந்தது. அந்த ஆள்

யார்? அவளுடைய நிலைமை அவனுக்கு எப்படித் தெரியும்? தெரிந்தாலும் அக்கரையுடன் வந்து காப்பாற்றவேண்டிய அவசியமென்ன? என்பனபோன்ற எண்ணங்கள் அவளுக்கு உதித்தன. அந்த ஆள் இறந்துவிட்டானு அல்லது உயிரு டன் இருக்கிறனு என்பதும் அவளுக்குத் தெரியவில்லை. ஆனல் அந்த இரவு முதல் அவள் காதில் எத்தகைய அழுகுர லும் பெருமூச்சும் கேட்கவில்லை. இதனல் அவ்வறையைப் பற்றி ஏதோ மர்மம் இருக்கவேண்டுமென்று அவள் நினைத் தாள். அவனை அதே கட்டடத்தில் வேறு எங்கேனும் மறைவாக வைத்துவிட்டார்களோ என்றும் நினைத்தாள். மேலும் அவன் ஒரு பைத்தியக்காரனுக இருக்கவேண்டு மென்றும் நினைத்தாள்.

கோகிலம் தான் அங்கிருந்து வெளியேற முடியாதென நினைத்துவிட்டபடியால் தப்பித்துச் செல்வதற்கு வேண்டிய யோசனையைக்கூடச் செய்யவில்லை. ஆனல் அவள் எப்படி யாவது தப்பித்துக்கொண்டு தன தாயினிடமும் சகோதா னிடமும் போய்ச் சேர்ந்துவிட்டால் அவள் மனம் எவ்வளவு சந்தோஷப்படும்? ஆனல் என் செய்வாள் பாவம்! அந்தக் கட் டடத்தின் உயரத்தையும், ஜன்னல்களுக்கு இருக்கும் இரும் புக்கம்பிகளையும் பார்க்கும்போதே அவள் மனம் கடலில் ஆழ்ந்து விடுகிறது. இப்படித் தனியாகத் துக்கத்துடன் உட்கார்ந்திருப்பதால் தனக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்றும் அவள் நினைத்ததுண்டு. ஏதோ ஒரு உருவம் அவளை வெளியே அழைத்துச்செல்ல முயன்றும் முடியாமற்போன அந்த இரவிற்கு அப்பால் நான்காவது நாள் காலை சீக்கிரத்தி லேயே அவள் தன் சோபாவை விட்டு எழுந்து ஏதோ முன் னதாகவே முடிவுக்குவந்த வேலைகளைச் செய்பவள்போல் சுறு சுறுப்பாக வேலையைக் கவனித்தாள். சுமார் ஐந்துமணிக்கு

அம்மாளிகை முழுதும் நிசப்தமாக இருந்தது. சூரியப் பிர காசம் பக்கத்திலுள்ள நிலங்களின்மீது பாவவில்லை. நிலங்க ளுக்கப்பால் ஒரு ஆறு செல்கிறது. அந்த ஆற்றங்கரையில் இருந்துகொண்டு பலர் மீன் பிடிப்பதை கோகிலம் அடிக் கடி ஜன்னலிலிருந்து பார்த்திருக்கிறபடியால் இப்போது அவள் செய்யும் வேலையில் அவளுக்கு உற்சாகம் எற்பட்டது. அந்த அறையில் பல புஸ்தகங்கள் இருந்தனவே யொழிய எழுதுவதற்குரிய சௌகரியங்கள் ஒன்றும் இருக்கவில்லை. அங்கு இங்கி அதாவது மை இல்லாமலிருந்தும் அவள் விளக் கின் கருப்பை யெல்லாம் சேர்த்துத் தண்ணீரில் கரைத்து இங்கி யாக்கினாள். ஒரு தீக்குச்சியைச் சரியாகச் சீவி பேனா ஆக்கினாள். அங்கிருந்த புஸ்தகங்களில் இருந்த எழுதப் படாத ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டாள், பின்னர் அவள் கீழ்வருமாறு எழுதலானாள்:—

"இக்கடிதம் யார் கையில் அகப்படுகிறதோ அவர்கள் தயவு செய்து, கோகிலம் என்னும் மாது பலாத்காரமாக இம் மாளிகையில் அதாவது பைத்தியக்கார ஆஸ்பத்திரி எனச் சொல்லப்படுவதும், வீரபாலய்யாவினுடையதென்று சொல் லப்படுவதுமான இக்கட்டடத்தில் அடைக்கப்பட்டிருக்கிறாள் என்று போலீஸாரிடம் தகவல் தெரியப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் பல குற்றங்கள் வெளியாகும். யாரோ பைத்தியக்காரி எழுதியதென்று கருதி இக்கடிதத்தை யாரும் அலட்சியம் செய்துவிடக்கூடாதெனக் கேட்டுக் கொள்கிறேன். இக்கடிதத்தைக் காண்பவர் இதைப் போலீசாரிடம் கொடுப்பதால் ஜீவகாருண்யமான ஒரு காரி யத்தைச் செய்தவராவார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தயவு செய்து ஒரு பெண்மணியின் கோரிக்கையை நிறை வேற்றுங்கள்."

கோகிலம் சிரமத்தின்மீது கண்டுபிடித்த பேனாவினாலும் இங்கியினாலும் இவ்வாறு எழுதினாள். தான் முதலில் நினைத்த அல்லது எதிர்பார்த்ததைவிட அக்கடிதத்தை அழகாகவும் நன்றாகப் படிக்கும்படியும் எழுதி முடித்தாள். சரி! அக் கடிதத்தை அக் கட்டடத்துக்கு வெளியே அனுப்புவதெப்படி? அவள் அது சம்பந்தமாக எல்லாம் தீர்க்கமாக ஆலோசித்து ஏதோ ஒருவிதமான முடிவுக்கு வந்திருந்தாள். அவள் அவ் வறையில் இருந்த மற்ற சாமான்களைக்கொண்டு சிறிய வில் மாதிரி ஒன்றைத் தயாரித்து ஜன்னலின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு எதிரில் ஆற்றோரமாக யாரேனும் வருகிறார்களா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். இதற்கிடையில் அவள் தனக்கும் அந்த ஆற்றோரத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையும், தன் வில்லுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதையும் யோசித்துப்பார்த்து வில்லில் வைத்து அடித்தால் அக்கடிதம் ஆற்றோரத்தில் போய்விழும் என்று நிச்சயித்துக்கொண்டாள்.

அவள் அதிகநேரம் காத்திருக்க வேண்டியதாக இருக்கவில்லை. சொற்ப நேரத்துக்குள் ஒரு ஆள் பெரிய பலம்வாய்ந்த குதிரையின்மீது ஏறிக்கொண்டு ஏதோ வேலையாக அந்த ஆற்றோரமாக வந்தான். அவனுடைய கவனத்தை இழுக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் அவள் தன் வெண்மையான கைக்குட்டையை ஆட்டினாள். அதிலும் அவளுக்கு வெற்றியே கிடைத்தது. குதிரைமீது இருந்த ஆள் தன் குதிரையை நிறுத்தி அந்த ஜன்னலை உற்றுநோக்கினான். உடனே கோகிலம் தான் எழுதிவைத்திருந்த கடிதத்தை மடித்துக் கல்போல் கெட்டியாக்கித் தன் கையிலிருந்த வில்லில்வைத்து அடித்தாள். அக்கடிதம் அக்குதிரைக்குச் சிறிது தூரத்தில் போய் விழுந்தது. உடனே குதிரை மீதிருந்த ஆள் கீழே குதித்து

அக்கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தான். படித்து முடிந்த பிறகு அதைத் தன் சட்டைப்பையில் வைத்துக் கொண்டு தன் கைக்குட்டையை ஆட்டினான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவள், அவ்வாறு அவன் கைக்குட்டையை ஆட்டியதிலிருந்து அவன் அச்செய்தியைப் போலீசாருக்கு அறிவிப்பான் என்று தெரிந்துகொண்டாள். சொற்பநேரத்துக்குள் அவனும் மறுபடி குதிரைமீது ஏறி அங்கிருந்து வேறு பக்கமாகப் போய்விட்டான்.

குதிரைமீது வந்த அந்த ஆள் போய்விட்டதும் கோகிலம் தன் அறையின் ஜன்னல் கதவை மூடிக்கொண்டு சந்தோஷத்தின் மிகுதியால் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள். ஏனெனின் தான் இனி விரைவில் அச்சிறையினின்றும் வெளியாக்கப்படலாம் என்று நம்பினாள். இப்படிப்பட்ட எளியமுறை ஏன் இன்னும் சில தினங்களுக்கு முன்னரே தனக்குத் தோன்றியிருக்கக்கூடாது என்று நினைத்தாள். ஆனால் இப்போதும் காலங்கடந்து விடவில்லை. இப்போதாவது அந்த எண்ணம் தோன்றிற்றே என்று சந்தோஷப்பட்டாள். அப்போது அவள் நம்பிக்கையுடன் இரு கைகளையும் கோர்த்துக் கொண்டு, 'ஓ, எனதன்புள் தாயாரே! இன்னும் சிலமணி நேரத்துக்குள் உன் மகள் வேண்டுமென்றே உன்னை விட்டு விட்டு ஓடிப்போகவில்லை என்பதை நீ தெரிந்துகொள்வாய். எனதன்புள்ள சகோதரா! உன்னை மீண்டும் என் கரத்தில் ஏந்தும் பாக்கியம் கிடைக்கும்போது நான் எவ்வளவு சந்தோஷப்படுவேன் தெரியுமா? ஆனால் ஐயோ கடவுளே! நான் அங்கு இல்லாத இந்த ஒரு வாரத்தில் மிகக் காயலாவாக இருந்த எனது தாயார் இறந்துவிட்டிருந்தால் என்ன செய்வேன்!' என்று துக்கித்தாள்.

அப்பெண் அவ்வறையில் அடைபட்டது முதலே அடிக்கடி இதைப்பற்றி நினைத்துத் துக்கப்பட்டதுண்டு. ஆகவே அதே துக்கம் இப்போதும் ஞாபகத்துக்கு வந்ததால் சிறிது நேரத்துக்குமுன் தோன்றிய சந்தோஷமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் மாயமாய் மறைந்தது. சொற்ப நேரத்துக்குமுன் ஆனந்தக் கண்ணீர் வடித்த அதே கண்களினின்றும் இப்போது துக்கக் கண்ணீர் வடிந்தது. ஆ! மனித வாழ்க்கையின் நிலைமையைப் பாருங்கள். நிமிஷத்துக்கு நிமிஷம் துக்கமும் சந்தோஷமும் மாறி மாறி வருகிறது. வழக்கப்படி அம்புஜம் அவளுக்கென்று காலை ஆகாரத்தைக் கொண்டு வந்தாள். பகல் பன்னிரண்டு மணி சுமாருக்கு மங்களமும் அங்குவந்தாள். கோகிலம் மங்களத்தைப் பார்த்து மூன்று தினங்களாயிருந்தன. அந்த அயோக்கிய மாதாகிய மங்களத்தைப் பார்த்ததும் அருவருப்பின் மிகுதியால் கோகிலத்தின் உடல் முழுதும் நடுங்கியது. ஆகவே அவளுடன் ஒன்றும் பேசாமல் சும்மா இருந்தாள். அப்போது மங்களம், நான் உன்னிடம் வாரதது கண்டு நீ ஆச்சர்யப்பட் டிருக்கலாம். ஆயினும் இஷ்டப்படி யோசனை செய்துகொண்டிருப்தற்காக உன்னைத் தனியே விட்டு வைப்பதுதான் நலமென நான் நினைத்தேன். தர்மலிங்கம் பிரபுவின் யோசனையை அங்கீகரிக்காமல் இருப்பதன் பயனின்மையை இப்போதேனும் நீ உணர்ந்திருக்கலாமென்று நினைக்கிறேன். உண்மையில் இப்போதைய உன்னுடைய அபிப்பிராய மென்ன?' என்று கோகிலத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அப்போது கோகிலம் மிக ஆத்திரத்துடன், 'முடியவே முடியாது. ஆயிரம் முறை முடியாதென்று உறுதி கூறுவேன்' என்று ஆர்ப்பரித்தாள். அப்போதும் மங்களம் நிதானமாக, 'நீ பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்ளவேண்

186524

டாம். இப்போது நீ செய்வதெல்லாம் உன் அதிர்ஷ்டத்துடன் சண்டை போடுவதுபோல் இருக்கிறது. உன்னுடைய பிடிவாதத்தால் உனக்கு நஷ்டமேயொழிய வேறொன்றுமில்லை. அன்று இரவு ஒரு பைத்தியக்காரன் எப்படியோ தப்பி இங்கு வந்து உன்னை விடுவிக்க முயன்றதாலேயே அவன் உன்னை எப்படியாவது வெளியே கொண்டுபோய் விட்டுவிடுவான் என்று நினைக்கவேண்டாம். அவனை இப்போது ஜாக்கிரதையாகப் பந்தோபஸ்தான இடத்தில் வைத்திருக்கிறோம்' என்றதும் அவள் சொன்னதன் உட்கருத்தையறியாத கோகிலம் 'அப்படியானல் அவன் இறந்துவிடவில்லையா? அன்றிரவு அவன் பட்ட அடியினின்றும் அவன் இறந்து போயிருப்பான் என்று நினைத்தேன்' என்றாள். அதற்கு மங்களம், 'இல்லை, அவன் இறக்கவில்லை. வீரபாலய்யா அவனைப் பலமாகவே அடித்தானென்றாலும் கொல்லும் நோக்கத்துடன் எதுவும் செய்யவில்லை. மேலும் அவன் கொன்றாலும் சாகமாட்டாதவன் போலத் தெரிகிறது' என்று கூறினாள்.

அந்த மனிதன், பாவம்! அக்கட்டடத்தில் அனுபவிக்கும் கொடுமைகளுக்காக மனமிரங்கிய கோகிலம், 'அம்மனிதன் யார்? அவனுக்கென்னவேலை' என்று ஆர்வத்துடன் கேட்டாள். அதற்கு அம்மாது, 'அவன் யாரென்று கேட்கிறாயே. அவன் ஒரு பைத்தியக்காரன்; அதுதவிர அவனிடம் வேறு விசேஷமொன்றுமில்லை. அவன்தான் நீ இவ்விடத்துக்கு வந்தது முதல் இரண்டு தினங்களில் கேட்ட பயங்கரமான அழுகைக் குரலையுண்டாக்கியவன். அதைப்பற்றியெல்லாம் இப்போது இங்கு பேசிக்கொண்டிருக்க நான் வரவில்லை. நமது தர்மலிங்கம் பிரபு இன்று மாலை இங்கு வரப்போகிறார் என்பதையும், அவர் இன்று இராச்சாப்பாடு உன்னு

டன் சாப்பிடுவதாக உத்தேசித்திருக்கிறார் என்பதைச் சொல்லவுமே வந்தேன். அவர் நீ தக்க முறையில் அவரை வரவேற்பாய் என நம்புகிறார். அன்றிரவு அந்த பைத்தியக்காரன் அடித்த அடியால் அவர் அதிக கஷ்டமடைந்திருக்கிறார். நீ தீர்க்கமாக யோசித்து அவரது விருப்பத்தை நிறைவேற்ற உனக்கு சாவகாசம் கொடுக்கவேண்டுமென்பதற்காக அவர் இந்த மூன்று தினங்களாக இங்கு வரவில்லை. நான் இப்போது அவரிடம் என்ன சொல்லட்டும்?' என்று கேட்டாள். அதற்குக் கோகிலம் அதிக கோபத்துடன் தன் முகம் சிவக்க 'என் உயிர் இந்த உடலில் தங்கியிருக்கும் வரை அவரை இவ்விஷயத்தில் எதிர்த்தே தீருவேன் என்று நிச்சயமாகச் சொல்லிவிடு. நீ என் எதிரில் இருப்பதே எனக்கு அருவருப்பாக இருப்பதால் நம்முடைய பேச்சு இத்துடன் முடியட்டும்' என்று ஆத்திரத்துடன் கூறினள். அதைக்கேட்ட மங்களம் கோபமும் வெறுப்பும் அடைந்தவளாய்த் தன் தலையை அசைத்துக்கொண்டே, 'இன்னமும் நீ இவ்வளவு அகங்காரத்துடன் இருப்பதானல் உன் கர்வத்தை உடனே அடக்க முயற்சி செய்ய வேண்டியதுதான்,' என்று கூறிவிட்டு அவ்வறையை வெளிப்புறத்தில் பூட்டிக்கொண்டு போய் விட்டாள்.

மங்களம் போனபிறகு சுமார் மணி பன்னிரண்டு இருக்கும். அப்போது கோகிலம் உட்கார்ந்துகொண்டு, 'ஏன் இன்னும் யாரும் வரவில்லை. நான் என் கடிதத்தில் கேட்டுக்கொண்டபடி அக்கடிதத்தை எடுத்தவர் செய்வதாக இருந்தால் அதைச் செய்து முடிப்பதற்குப் போதுமான காலம் கடந்து விட்டதே. ஆனல், ஓ! அது ஒரு பைத்தியக்காரியின் கடிதம் என அவர்கள் நினைத்து விட்டார்களோ? சீ! இப்படியெல்லாம் நான் நினைக்கக்கூடாது. இவ்வாறு நினைப்ப

தாலேயே நான் பைத்தியக்காரி என்று ஏற்படுகிறது' என்று நினைத்தாள். ஒவ்வொரு மணியாகப் பல மணி நேரம் கழிந்தது. எனினும் அவள் கடிதம் வெளியில் போய் எத்தகைய காரியத்தையும் சாதிக்கவில்லை. ஆகவே மெதுவாக அவளும் நம்பிக்கையை இழந்து துக்கத்தில் மூழ்கலானாள். ஆயினும் அப்போதும் அவள் தர்மலிங்கம் பிரபுவின் இஷ்டத்துக்கு இணங்குவதென்று முடிவு செய்யவில்லை. எவ்வளவுதான் நெருங்கிய காலம் ஏற்பட்டாலும் கடைசியில் செய்யக்கூடிய காரியமும் ஒன்று இருக்கிறதல்லவா? அதுதான் மரணம்.

மாலை நேரமும் வந்தது. சூரியனும் மேற்குக்கடலில் மூழ்கினான். உலகெங்கும் இருட்டு காணப்பட்டது. சொற்ப நேரத்துக்கெல்லாம் வேலைக்காரி அம்புஜம் அங்கே வந்தாள். பிரகாசமான விளக்குகளை ஏற்றினாள். இராச் சாப்பாட்டுக்காக அவள் ஒரு மேஜையின் மீது வெண்மையான துணியை விரித்தாள். அப்போது கோகிலம், தான் இரவில் ஒன்றையும் சாப்பிடப் போவதில்லையாதலால் அவ்வாறு சாப்பாட்டு வசதியைத் தயாரிக்க வேண்டிய அவசியமில்லையென்று தெரிவித்தாள். இவ்வாறு கேட்பதால் உண்மையில் தர்மலிங்கம் பிரபு வரப்போகிறாரா என்பது வெளிப்படுமாதலால் அதைக் கேட்டாள். அவள் எதிர்பார்த்தபடியே அம்புஜமும், 'அம்மணி! இன்று இரவு தர்மலிங்கம் பிரபுவும் உன்னுடன் சாப்பாடு உட்கொள்ளப் போகிறார்' என்று கூறியதும் கோகிலம் தன் கெட்ட காலத்தின் உச்சநிலை நெருங்கி விட்டதாகக் கருதினாள். அப்போது அவள் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது இதற்குமுன் முறை பிரபு வந்த போது அவள் வேறொரு அறையில் சென்று உள்பக்கம் பூட்டிக் கொண்டதுபோல் செய்யலாமென நினைத்தாள். ஆயினும் அதை அவள் நினைக்கும்போதே அவள் மனதைப்

படித்ததுபோல் அம்புஜம் திடீரென்று போம் எல்லா அறைகளின் உட்புறச் சாவியையும் எடுத்துத் தன்னிடம் வைத்துக் கொண்டு விட்டாள். இதனல் கோகிலம் தன் எதிரிகளெல்லாம் தன்னை அழித்து விடுவதெனக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறர்கள் என்று நினைத்துக் கொண்டாள். அப்போது அம்புஜமும் ஏதோ காரியமாக வெளியே போனள். கோகிலம் ஒரு கத்தியை எடுத்துத் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று நினைத்தாள். ஆனல் அவளுடைய தாயார், சகோதரன் ஆகிய இருவருடைய உருவங்களும் எதிரில் வந்து நின்று அச்செயலைத் தடுத்ததுபோல் தோன்றியது. ஆகவே அக்கத்தியை அவள் விசிறி எறிந்துவிட்டு, 'இப்போது இந்த வேலை கூடாது. அது கடைசி வேலையாக இருக்கவேண்டும்' என்று மெதுவாகக் கூறினள்.

அப்போது அம்புஜம் ஒரு சேவகனுடன் மீண்டும் அவ்வறையில் வந்தாள். அவளும் அச்சேவகனும் பல தட்டுகள் நிறைய ஆகார பதார்த்தங்களைக் கொண்டுவந்தனர். அவர்களுக்குப் பின்னல் தர்மலிங்கம் பிரபுவும் விலை யுயர்ந்த மாலை ஆடைகளை அணிந்துகொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அவன் சங்கேதம் செய்ததும் ஆட்கள் வெளியே போய்விட்டார்கள். அவனும் கோகிலமும் மட்டும் தனியாக அவ்வறையில் இருந்தார்கள். அச்சமயம் பிரபு, 'நான் உன்னுடன் விவாதம் செய்யும்படியோ அல்லது உன்னை மிரட்டும்படியோ அல்லது கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும்படியோ நீ வைத்துக் கொள்ளமாட்டாய் என்று நம்புகிறேன். நீ பூரணமாக என் தயவில் சிக்கிக்கொண்டிருக்கிறய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். உன் நிலைமை என்ன என்பது உன் நினைவில் இருக்கட்டும். நீ, என் இஷ்டப்படி நடந்துகொண்டு என்னைச் சந்தோஷப் படுத்திவிட்டால் அளவற்ற செல்வத்

தையும் இன்ப வசதிகளையும் உனக்கு அளிப்பேன் என்பது திண்ணம்' என்றான். ஆனால் கோகிலம் எவ்வித பதிலையும் கூறாமல் அவ்வறையின் ஒரு மூலையில் தலையைக் குனிந்த வண்ணம் நின்றிருந்தாள். அப்பிரபுவின் முகத்தைப்பார்க்க வும் அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அப்பிரபு மீண்டும் அவளைப்பார்த்து, 'கோகிலம்! நீ இவ்வளவு முட்டாளாக இருக்கமுடியுமென்று நான் நினைக்கவே இல்லை. நீ மிக்க கற்புடையவளாதலாலேயே இவ்வாறு செய்கிறாய் என்றும் என்னால் கூறமுடியாது. எந்த ஒரு பெண்ணினிடமாவது கற்பு என்பதற்குச் சொல்லப்படும் வியாக்யானத்தின் முறையில் அது இருக்கிறதா என்பதில் எனக்கு எப்போதும் சந்தேகமே. அதிலும் கற்பு என்று தவறாக நினைக்கப்படும் ஒன்றை இழப்பதற்காக இவ்வளவு சொத்தும் செல்வாக்கும் கிடைக்குமென்றால் அதை இழக்காதவர் யாரேனும் இருப்பார்களென்று நான் நம்புவதில்லை. ஆதலின் நீ, உன்னை நாங்கள் பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டதற்காகவும், அன்று இரவு தப்பித்துச் செல்ல முடியாமல் அகப்பட்டுக்கொண்டதற்காகவும், நீ தனியாக இங்கு அடைபட்டிருந்து கஷ்டப்பட்டதற்காகவும் கோபித்துக் கொண்டிருக்கிறாய் என்றே நான் நினைக்கிறேன். அப்படியானால் உன்னைச் சந்தோஷப்படுத்த நான் முயற்சிக்கிறேன். இதோ பார்! இதைப்பார்த்தாவது நீ என் இஷ்டப்படி நடந்துகொண்டால் நீயும், உன் தாயும் எவ்வளவு சந்தோஷ வாழ்க்கையை அனுபவிக்கலாமென்று தெரிந்து கொள்ளலாம். மேலும் இதனால் நான் உன்னிடம் எவ்வளவு தாராளத்துடன் நடந்துகொள்வேன் என்பதையும் அறியலாம், என்று கூறிக்கொண்டே ஒரு பெட்டியைத் திறந்து காண்பித்தான். அதில் வைரங்களாலும், தங்கத்தாலும்

செய்யப்பட்ட நகைகளும், கைக்கடிகாரமும், மோதிரங்களும் இருந்தன. அதன் விலை ஆயிரக்கணக்கான பவுன்களாக இருக்கும். உடனே மற்ருெரு கோட் புஸ்தகத்தைக் காண் பித்தான் அதில் நூறு பவுன் நோட்டுகளே அதிக மிருந்தன. உண்மையிலேயே எப்படிப்பட்ட மனஉறுதி யுடையவர்களை யும் தடுமாறச் செய்யக்கூடிய விலையுயர்ந்த அவைகளை அவள் பார்த்தா ளென்ருலும் அதில் என்ன இருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆர்வத்தால் பார்த்தாளே யொழிய அதைப் பார்த்ததால் அவள் மனம் மாறவும் இல்லை. அவள் அதை லட்சியம் செய்யவுமில்லை. உடனே அவள் பழையபடி தன் தலையைக் குனிந்துகொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டாள்.

அதைக்கண்ட தர்மலிங்கம் பிரபு சிறிது ஆத்திரத்துடன், 'இதுவும் முட்டாள்தனமான நினைப்புதான். இவ்வளவு சிரமப்பட்டு உன்னை அபகரித்துக்கொண்ட நான் உன்னை எளிதில் விட்டுவிடுவேன் என்று நினைக்கிருயா? அப்படி நினைப்பதாயின் நீ தவருன எண்ணத்துடன் இருக்கிருய் என்றுதான் கூறவேண்டும். நான் என் உண்மையான எண்ணத்தை உன்னிடம் விவரித்துக் கூறிவிட்டேன். நான் உன் விஷயத்தில் எவ்வளவு தாராளமாக நடந்துகொள்வேன் என்பதையும் காண்பித்துவிட்டேன். இனியும் நீ பிடிவாதமாக இருந்தால் நான் மிரட்டவேண்டியதாக ஏற்படும். மிரட்டிய பிறகு அதன்படி நான் நடக்கவேண்டியதாகவும் இருக்கும். இப்போது மணி பத்து ஆகிவிட்டது. இன்னும் ஒரு மணி நேரந்தான் நான் பொறுத்துக்கொண் டிருப்பேன். அதற்குள் நான் ஆகாரத்தையும் மதுபானத்தையும் அருந்துவேன். அதில் நீ கலந்துகொண்டாலும் கொள்ளாவிட்டாலும் எனக்கு அக்கரையில்லை. பிறகு பதினெருமணி அடித்ததும்

இதோபார். இந்தப் புட்டியிலுள்ள மருந்தைச் சிறிது மது பானத்துடன் சேர்த்து உன் வாயில் ஊற்றும்படி என் சேவகர்களுக்குக் கட்டளையிடுவேன். அவர்கள் நீ எவ்வளவுதான் குய்யோ முறையோ என்று அடித்துக்கொண்டாலும் கேட்காமல் உன் வாயில் ஊற்றுவார்கள், அதனால் நீ மூர்ச்சையடைந்து ஸ்மரணை தப்புவாய். பிறகு நடக்கிற காரியம் நடக்கும். நான் முன்னதாகவே எச்சரிக்கை செய்துவிட்டேன். ஒருமணிநேரம் இருக்கிறது, யோசித்துப்பார்' என்று கண்டிப்பாகக் கூறினன்.

அப்போதும் அப்பெண் ஒன்றும் பேசாமல் வாய்மூடி மௌனியாய் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி யிருப்பது போல் அதே இடத்தில் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். தர்மலிங்கம் பிரபுமட்டும் ஒரு மேஜையின் அருகில் உட்கார்ந்து அதிலிருந்த ஆகாரத்தை அருந்தினன். அது முடிந்ததும் மணி யடிக்கவே சேவகர்கள் வந்து ஆகாரம் இருந்த தட்டை அப்புறப்படுத்திவிட்டுப் பழத்தையும் மதுபானத்தையும் மேஜைமீது வைத்துவிட்டு வெளியே சென்றபோது பிரபு அவர்களைப்பார்த்து, 'அடுத்த முறை நான் மணி யடிக்கும்போது நீங்கள் மட்டுமன்றி மங்களமும் வீரபாலய்யாவும் உங்களுடன் வரட்டும்; இங்கே நால்வருக்கும் வேலை இருக்கிறது' என்ருன். அவர்களும் போய் விட்டார்கள். உடனே அவன் கோகிலத்தைப்பார்த்து, 'நான் மிகக் கண்டிப்பாக இருக்கிறேன் என்பதை இப்போதாவது அறிகிருயா ?' என்று கேட்டான். அப்போதும் அவள் பதில் கூருமல் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். உண்மையில் அவள் பல விஷயங்களைப்பற்றி அச்சமயத்தில் ஆலோசித்தாள். பெண்ணாசை பிடித்த அக்கொடிய கிழவன் எப்படியாவது தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விடுவான்.

என்பதை அறிவிற் சிறந்த கோகிலம் அறியாமல் இல்லை. ஆகவே அவள் ஏதாவது ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டிய காலம் வந்துவிட்டதென்பதை அறிந்தாள். முடிவுக்கு வருவதென்றால் அவன் அபிப்பிராயத்துக்கு இணங்குவதென்று அர்த்தமா? இல்லவே இல்லை. ஒருகாலும் அவள் அதற்கு இசையாள். ஆகவே உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டியதுதான் என்று துணிந்தாள். அதற்குரிய ஆயுதமாகிய கத்தியும் மேஜைமீது இருப்பதைக் கண்டாள். ஆயினும் அப்போதே குத்திக்கொண்டிறக்க அவளுக்கு மனம் வரவில்லை. அந்த நிமிஷம் வரும்போது அவ்வாறே செய்துவிடலாமென்றும் அதுவரை பார்ப்பதென்றும் நினைத்தாள். அவள் மனதில்தான் தன் தாயைவிட்டு வந்த ஞாபகம் வந்தது. ஆதலின் தனக்குள், 'தாயே! நான் மறுபடியும் உன்னையும், என் அருமைச் சகோதரனையும் பார்க்கப்போவதில்லை. ஆனால் கடவுள் என்னிடம் இருப்பதுபோல் அவ்வளவு கொடுமையாக இல்லாமல் உங்கள் விஷயத்திலாவது அனுதாபத்துடன் இருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இக்காலத்துக்குள் நீ இறைவனடி சேர்ந்து விட்டிருந்தால் இந்தப் பிரார்த்தனையும் செலுத்த வேண்டிய அவசியமில்லாமற் போகிறது' என்று நினைத்ததும் கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருகிற்று. அவளுக்கும் தெரியாமல் பெருமுச்சு பொங்கியது. அச் சத்தமும் இரும்பினும் கடினமான ஹிருதயத்தை யுடைய அப்பிரபுவின் காதில் நுழைந்தது.

அவன் மெதுவாகத் தன் தலையைத் தூக்கி ஒத்தைப் பார்வையால் கோகிலத்தைப் பார்த்துக்கொண்டே, 'நீ ஏதேனும் முடிவுக்கு வந்திருப்பாய் என்று நம்புகின்றேன்' என்றான். அப்போது அவளும், 'ஆம், ஆம். நான் ஒருவித

முடிவுக்கு வந்து விட்டேன்' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து எழுந்து மேஜையின் அருகில் சென்றாள். அதைக் கண்ட பிரபு அவள் தனக்குப் பணியப் போகிறாள் என்று நினைத்தான். ஆனால் அவளுடைய கண்களிலும் முகத்திலும் காணப்பட்ட கோரத்தன்மையைக் கண்டதும் அவன் மனங்கலங்கித் தன் ஆசனத்திலிருந்து எழுந்து, 'கோகிலம்! நீ என்ன செய்யப்போகிறாய்? உன் தோற்றத்திலிருந்து ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லையே' என்று கேட்டான். அப்போது அவள், 'ஆம், சாவதென்று முடிவு செய்து விட்டேன்' என்று கூறிக்கொண்டே கண்மூடி கண் திறப்பதற்குள் ஒரே பாய்ச்சலாய் மேஜைமீது பாய்ந்து அங்கிருந்த கத்தியை எடுத்துத் தன் மார்பில் குத்திக்கொள்ளப் போனாள். அப்போது பிரபுவும் தன் பலஹீனமான நிலைமையிலும் மிக்க முயற்சியுடன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு அக்கத்தி அவளது மார்பில் படாதபடி தடுத்தான். ஆயினும் அது அவனது கையிற்பட்டதால் இரத்தம் பீறிட்டு வர அவன் அப்பெண்ணைப் பார்த்து ஆத்திரத்துடன், 'அயோக்கியப் பெண்ணே! இப்போது நீ என்ன செய்வாய்? இதனாலெல்லாம் நீ தப்பித்துக்கொள்ள முடியாதென்று சொல்லிக்கொண்டே தன் கையை அவள் இடுப்பில் கொடுத்து அவளை அணைத்துத் தூக்கிக்கொண்டு அங்கிருந்த மணியின் பக்கமாகச் சென்று அம்மணியை அடித்தான். அவன் அந்த மணியை அடிப்பதற்குள் அவனுடைய தேகம் அவள்மீது பட்டதாலேயே அவள் மூர்ச்சை யடைந்து ஸ்மரணையின்றித் தரையில் விழுந்தாள். சொற்ப நேரத்துக்குள், பிரபு அடித்த மணியின் சத்தத்தைக்கேட்ட ஆட்களும் அவ்வறையில் வந்தார்கள்.

நேயர்காள்! கோகிலத்தின் கற்பின் திறத்தைப் பார்த்தீர்களா! நித்திய தரித்திரத்தில் மூழ்கிய அவள், எத்துறையிலாவது தன் தாய்க்கும் சகோதரனுக்கும் சந்தோஷ வாழ்க்கையை அளிக்கவேண்டுமென்னும் ஆவலுடையவளாயிருந்தும், தானும் தன் தாய், சகோதரன் ஆகியோரும் எல்லையில்லாத இன்ப மனுபவிக்கக்கூடிய பொருளைத் தருவதாக தர்மலிங்கம் பிரபு கூறியபோதும் அதை மறுத்துவிட்டாள். அதற்குக் காரணம் என்ன? அப்பிரபு கருதியது போல் கோபமோ முதலிய குறைகளோ அல்ல. அப்பெண் மணியின் கற்பின் திறமும் பரிசுத்த ஒழுக்கமுமே காரணமாகும். அக்கொடிய பிரபு நினைத்ததுபோல, பெண்களில் கற்பைப் பிடிவாதமாக உடையவர்கள் இல்லையென்று கருதும் யோக்கியர்கள் இப்போதும் நம் இடையில் சிலராவது இல்லாமலில்லை. அப்படிப்பட்ட அயோக்கிய சிகாமணிகளுக்கெல்லாம் கோகிலத்தைப் போன்ற உத்தம மாதர்கள் தக்க பாடத்தைக் கற்பிக்கச் சிறிதும் பின் வாங்கலாகாதென்பதே நமது வேண்டுகோள்.

## 43-வது அத்தியாயம்

### இந்திராபாயின் அபார முயற்சி

நாம் மேலே கூறிய விவரம் நடந்து கொண்டிருக்கும் அதே இரவில் சுமார் ஒன்பது மணிக்கு இந்திராபாய் என்னும் கொள்ளைக்கார மாது தன் வழக்கப்படி ஆண் உடையை அணிந்து கொண்ட வண்ணம் தன் குதிரை மீது இரத்தினபுரியைச் சேர்ந்த நடுக்குப்பத்தில் கோபாலன் தம்பதிகளுடைய வீட்டின் முன்வந்து நின்று குதிரையை

விட்டு இறங்கினாள். அவள் தன் குதிரையை ஓரிடத்தில் கட்டி விட்டு அவ்வீட்டில் புகுந்ததும் ராட்சஸகுப்பன் இருக்கிறானா என்று விசாரித்தாள். கோபாலன் அதற்கொன்றும் பதில் சொல்லாமல் பேசாமல் தன்னைப் பின் தொடர்ந்து வரும்படி சமிக்ஞை செய்துவிட்டு முன்னே நடந்தான். அவளும் அவன் பின்னாலேயே சென்றாள். வீட்டில் ஒரு அறையில் பலர் மதுபானம் அருந்திக்கொண்டும் ஊர் வம்புகளைப் பேசிக்கொண்டும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் எதிரில் எதையும் பேச விரும்பாமல்தான் கோபாலன் அவ்வாறு சமிக்ஞை செய்ததாகத் தெரிந்துகொண்டு அவன் பின்னால் சென்றாள். இருவருமாகக் கிலமாகப்போன மாடியின் மீது ஏறி, இரகசிய விஷயங்கள் பேசுவதற்காக என்று ஒதுக்கப் பட்ட அறைக்குள் சென்றனர். அவர்களிருவரும் தனியாக இருந்ததும் கோபாலன் இந்திராபாயினிடம், 'ராட்சஸ குப்பன் ஒளித்துக் கொண்டிருக்கிறான். ஏனெனின் இப்போது போலீசார் அவனைத் தேடுகின்றனர். இது உனக்குத் தெரியாதா?' என்று கேட்டான். அப்போது அவள், 'நான் சில தினங்களாக ஊரில் இல்லை. இங்கு நடந்த தொன்றும் எனக்குத் தெரியாது. என்ன விசேஷம்? போலீசார் ராட்சஸகுப்பனைத் தேடவேண்டிய அவசிய மென்ன?' என்று கேட்டாள்.

அப்போது கோபாலன், 'அப்படியா? உனக்குத் தெரிந்திருக்குமென்று நினைத்தேன். ராட்சஸ குப்பனும் ஜெயசிங்குமாகச் சேர்ந்து சில தினங்களுக்குமுன் கிருஷ்ணகிரி ஜமீன்தார் மாளிகையில் புகுந்து கொள்ளையடித்துவிட்டனர்,' என்றான். அச்சமயத்தில் அவள் முன்பு ஒருமுறை கிருஷ்ணகிரி இளைய ஜமீன்தார் தினகரம் பிரபுவை நடு இரவில் ஒரு ரஸ்தாவில் கொள்ளையடித்தது அவளுக்கு ஞாபகத்துக்கு வரவே

அவள் தன் முத்துபோன்ற அழகிய பல் வெளியில் தெரியும் படியாகச் சிரித்துக்கொண்டே, 'ஓ, அப்படியா? எனக்கு இப்போதுதான் இச்சங்கதி தெரியும். எப்படியிருந்தாலும் நான் ராட்சஸ குப்பனையும் ஜெபசிங்கையும் இன்னும் யாராவது ஒருவர் இருவரையும் பார்த்துத்தான் ஆகவேண்டும். மிக அவசரமான வேலை' என்று தெரிவித்தாள். அதற்குக் கோபாலன், 'ஓ, மாதே! ஜெயசிங்கையும் இன்னும் இருவர் அல்லது மூவரையும் நீ இப்போதே வேண்டுமாயினும் பார்க்கலாம். அல்லது அவர்களை நீ எங்கு அனுப்பும்படி சொல்கிருயோ அந்த இடத்துக்கு அரைமணி நேரத்துக்குள் அனுப்பிவிடுகிறேன். அவர்கள் அதிக தூரத்தில் இல்லாததால் அவர்களைமட்டும்தான் அழைக்கவோ அனுப்பவோ முடியும்,' என்ருன். அப்போது அவள், 'சரி, அப்படியானல் பத்துமணிக்குமேல் பதினெரு மணிக்குள்ளாக அவர்கள் என்னை நகரத்தின் நடுவிலுள்ள கோயிலண்டை வந்து சந்திக்கும்படி சொல்லவும். இவ்விஷயத்தில் நான் உன்னையே நம்பியிருக்கிறேன். நீ சிறிதும் தாமதமில்லாமல் அவர்களை அனுப்பவும். ஆனல் ராட்சஸ குப்பன் சமாசாரம் என்ன? நான் அவனைப் பார்த்துதான் ஆகவேண்டும். அவன் எங்கே இருக்கிருன் என்பதைச் சொல். நான் மேற்போட்டுக் கொண்டிருக்கும் காரியத்தில் அவன் உதவி முக்கியமாக வேண்டியதாய் இருக்கிறது. ஆகையால் என்னிடம் தெரிவிக்கப் பயப்படாமலும் உண்மையை ஒளியாமலும் அவன் எங்கு இருக்கிருன் என்பதைச் சொல்' என்று கேட்டாள்.

அதற்கு கோபாலன் 'அம்மா! அவன் மிக ஜாக்கிரதையாக ஒளிந்துகொண்டிருக்கிருன். அவனைத் தேடிக்கொண்டு துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் இங்கு வந்திருந்தார்கள்.

அவர்கள் அடிக்கடி நம் நடுக்குப்பத்துக்குத்தான் வந்து விடு கிறார்கள். அதிலும் யாராவது பெரிய பணக்காரர்கள் வீட்டில் கொள்ளைபோனால் அத்துப்பறிவோர் அதிக சிரமம் எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் இங்குவரும் மாகதம்மாள் கூறியதிலிருந்து இவ்விஷயத்தில் ராஜி ஏற்பட்டு விடுமென்றும் விரைவில் குப்பன் வெளிவருவானென்றும் தெரிகிறது' என்று கூறியதும், இந்திராபாய் அதிக பொறுமை இழந்தவளாய், 'எதிர்பார்க்கும் விஷயத்தைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் எங்கு பார்க்கமுடியும் என்பதை நீ கட்டாயம் தெரிவித்துத்தான் ஆகவேண்டும்' என்று கண்டிப்பாகக் கிழவனை கேட்டதால் கோபாலன், 'சரி, நான் உன்னை அவனிருக்கு மிடத்துக்கு அழைத்துச் செல்கிறேன். நீ தயவு செய்து முன்னதாகபோய் அருகி லிருக்கும். ஒரு பாலத்தினருகில் இரு. நான் ஐந்து நிமிஷத்துக்குள் உன்னை சந்திக்கிறேன். உன் குதிரை என் லாயத்திலேயே இருக்கட்டும். அந்த இடம் சமீபத்தில்தான் இருக்கிறது. விரைவில் போய் வந்து விடுவோம்.இருட்டாக இருப்பதால் போய் வருவதிலும் ஆபத்தில்லை' என்று கூறினான். அப்போது அம்மாது, 'அப்படியே ஆகட்டும்' நீ ஜெபசிங்கையும் மற்ற ஆட்களையும் அனுப்ப மறந்து விடாதே. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கைத்துப்பாக்கி இருக்கட்டும். தெரியுமா?' என்று கூறிக்கொண்டே கோபாலன் கையில் சில நாணயங்களைக் கொடுத்தாள். அதைக் கண்டதும் சந்தோஷ மடைந்த அவன், 'அம்மணி! எந்தக் காரியத்தையும் சாதிக்கும் திறமை உனக்கு இருக்கிறது. உன் கட்டளையை எவரும் நிறைவேற்றுவார்கள். உன் இஷ்டப்படியே ஆட்களை அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு உன்னைப் பாலத்தினருகில் சந்திக்கிறேன்' என்று தெரிவித்தான்.

உடனே இந்திராபாய் மாளிகையை விட்டுக் கீழே இறங்கி அவ்வீட்டை விட்டு வெளியேசென்று அருகிலிருந்த பாலத்தின் அருகில் சென்று நின்றுகொண்டு சுமார் பத்து நிமிஷம் வரை மேலும் கீழுமாக உலாவிக்கொண் டிருந்தாள். அப்போது கோபாலன் அங்கு வந்து சேர்ந்தான். பிறகு இருவருமாக நடந்தனர். சிறிது தூரம் சென்றதும் அவர்கள் அந்த ரஸ்தாவைவிட்டு இறங்கி கிளைப்பாதையின் வழியாக நூறுகஜ தூரம் வரையில் நடந்து அங்கொரு பள்ளத்தில் இறங்கினார்கள். பள்ளத்திலேயே சிறிது தூரம் சென்றபின் அங்கொரு குடிசையைப் பார்த்தார்கள். அதில் இருவரும் நுழைந்தனர். அக்குடிசையின் வாயிலில் ஒரு மனிதன் நின்றிருந்தான். அவன் கோபாலனையும் அவனுடன் வந்த மாதையும் உற்றுப்பார்த்து, 'ஐயா, கோபாலா! இந்நேரத்தில் என்ன விசேஷம்?' என்று கேட்டான். அதற்குக் கோபாலன், 'பாலு! ஒன்றும் பயப்படாதே. முக்கிய வேலையாகத் தான் வந்தேன்' என்று தெரிவித்துவிட்டு உள்ளே போனான். இந்திராபாயும் அவனைப் பின்தொடர்ந்து சென்றாள். குடிசையின் மத்தியில் ஒருமாது உட்கார்ந்துகொண்டு குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண் டிருந்தாள். அவள் பாலு என்ற மனிதனின் மனைவியாக இருக்கவேண்டுமென்று இந்திராபாய் நினைத்துக்கொண்டு மிக ஆவலுடன் குடிசை முழுதிலும் தன் கண்ணைச் செலுத்திப் பார்த்தாள். அங்கு குப்பன் காணப்படவில்லை. அவன் இல்லாத அந்த இடத்துக்கு கோபாலன் ஏன் அழைத்துவந்தான் என்று நினைத்தாள். பிறகு குடிசையின் பின்னால் ஒரு அறை இருந்தது. அதிலிருந்து சுருட்டு நாற்றம் வெளிவந்தது. ஆகவே அவர்களிருவரும் அதில் போய்ப் பார்த்ததும் அங்கு ராட்சஸ குப்பன் கவிழ்த்துப் போட்ட ஒரு தொட்டியின்மீது உட்கார்ந்துகொண்டு சுருட்டுப் பிடித்துக்கொண் டிருந்தான். அவன்

இவர்களைக் கண்டதும் பெருத்த குரலில், 'எங்கே வந்தீர்கள்? அன்று இரவு நாம் இருவரும் ஒருவண்டியை மடக்கியபோது உன்னைவிட்டு வந்த விஷயமாய்க் கேட்க வந்தாய்போ லிருக்கிறது. நீ கீழே விழுந்ததும் இறந்துவிட்டாய் என்று நினைத்துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன். இல்லாவிட்டால் கடைசி வரையில் உன்னுடன் இருந்திருப்பேன்' என்று கூறியதும் அவள், 'சரிதான். நான் பிழைத் தெழுந்து தப்பித்துக் கொண்டேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டாள். அதற்கு ராட்சஸ குப்பன், 'நமது கோபாலனுடைய தம்பி வேலன் நடுக்குப்பத்துக்கு வந்திருந்த போது அதைத் தெரிவித்தான். நீ எப்படியோ தப்பித்துக் கொண்டு துறைமுகப் பட்டணமாகிய நாகபுரிக்குச்சென்று அந்த வக்கீல்களை ஏமாற்றியதாகவும் தெரிவித்தான். அது மிகவும் வேடிக்கையான காரியம்தான். நானும் அதில் கலந்து கொண்டிருந்தால் அது இன்னும் சிலாக்கியமாக இருந்திருக்கும்,' என்றான்.

அப்போது இந்திராபாய் சிரித்துக்கொண்டே, 'என் செயலை நீ பாராட்டியது போதும். அதில் உனக்கு அவ்வளவாக சம்பந்தமில்லை யென்பது எனக்குத் தெரியும். நீ இன்னும் எவ்வளவு காலம் இந்தக் குகையில் அடைபட் டிருக்கப் போகிறாய்? நீ இப்போது பொருட்காட்சியில் வைக்கப்பட் டிருக்கும் காடியைப்போல் இருக்கிறாய் என்று சொல்வது பற்றிக் கோபிக்கவேண்டாம்' என்று பரிகாசமாகப் பேசினாள். அப்போது அவன் வருத்தமடைந்து, 'உனக்கென்ன வேடிக்கை பேசலாம். நீயும் இம்மாதிரி அகப்பட்டுக்கொண் டிருந்தால் தெரியும். 'துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் இப்போது இருப்பதுபோல் அவ்வளவு உஷாராக எப்போதும் இருந்ததில்லை யென்றே கூறலாம். எப்படி யிருந்தாலும் மா

கதம் சொல்வதைப்பார்த்தால், அவள் கூறுகிறபடி இவ்விஷ யத்தில் அவளுக்குச் செல்வாக்கு இருப்பது உண்மையாயின் இன்னும் இரண்டொரு தினங்களில் நான் வெளிவருவேன்'' என்று கூறினன். அம்மாது, 'ஐயா! இன்று இரவு உனக் குக் கொஞ்சம் பணம் கிடைக்குமாயின் நீ இக்குகையைவிட்டு வந்து அவ்விஷயத்தில் உதவிசெய்ய முன் வரமாட்டாயா என்பதை நான் அறிந்துகொள்ள வேண்டியவளாக இருக் கிறேன்' என்று கேட்டாள். அப்போது அவன் சுருட்டை ஒருதரம் இழுத்துப் புகையை வெளி விட்டுக்கொண்டே, 'இந்தக் குகையைவிட்டு எக்காரணத்தைக் கொண்டாவது வெளியே செல்வதென்றால் எனக்கு மிகவும் சந்தோஷமே. ஆனல் துப்பறியும் உத்தியோகஸ்தர்களுக்கும் அகப்படாத படி மிக ஜாக்கிரதையுடன் நான் வந்து போகவேண்டுமென் றால் அதற்குத் தக்கபடி அதிக பொருள் கிடைப்பதா யிருக்க வேண்டும். அப்படியில்லை யென்றால் இச்சந்தர்ப்பத்தில் வெளிவருவது முட்டாள்தனம் தானே' என்று பேரம் பேசி ஞன். அதற்கும் சளையாமல் இந்திராபாய், 'நீ கூறுவதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். தைரியமாக இன்றிரவு என்னு டன் வந்து உனக்கு வேண்டிய அளவு தொகையைப் பெற லாம்' என்றாள். அதற்கு அவனும் சம்மதித்ததால் அந்த இரவு பதினொரு மணிக்குமேல் இருபது நிமிஷத்துக்குள் அவன் தன்னை நகரத்தின் நடுவிலுள்ள கோயிலருகில் சந்திக்க வேண்டுமென்று அம்மாது கூறினள். அவனும் தன் தடியுட னும் இதர ஆயுதங்களுடனும் சரியாகக் குறிப்பிட்ட வேளையி லும் இடத்திலும் அவளைச் சந்திப்பதாக ஒப்புக்கொண்டான்.

பிறகு இந்திராபாயும் கோபாலனும் அவ்விடத்தைவிட் டுப் புறப்பட்டுப் போனவழியே திரும்பி நடுக்குப்பத்துக்கு வந்து சேர்ந்தார்கள். உடனே அம்மாது தன் குதிரைமீது

ஏறிக்கொண்டு, கோபாலனிடம் ஜெயசிங் முதலிய ஆட்களைத் தவறாமல் அனுப்பும்படியாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள். சுமார் பத்தரை மணிக்கெல்லாம் அவள் நாம் மேலே குறித்த கோயிலருகில் கால்நடையாக வந்துவிட்டாள். அந்த இடம் அவளுடைய இருப்பிடத்திலிருந்து சுமார் ஒரு மைலுக்குள்ளாக இருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் ஜெயசிங்கும் மற்ற இரு ஆட்களும் அவ்விடம் வந்து சேர்ந்தார்கள். மற்றும் சொற்பநேரத்துக்கெல்லாம் ராட்சஸ குப்பனும் அங்கே வந்து சேர்ந்தான். பணம் திரட்டுவதற்குப் புதியதொரு வழி அகப்பட்டதால் அவன் முகத்தில் சிறிது தென்பு காணப்பட்டது. எல்லாரும் ஒன்றாகக்கூடியதும் அக்கோயிலுக்கப்பால் அந்நகரத்துக்கு வெளியே ஒரு தோட்டத்தில் இருந்த ஒரு தனி வீட்டின் அடையாளத்தை அவர்களுக்குச் சொன்னாள். அவ்வீட்டைச் சுற்றிலும் பல மரங்கள் இருந்தன. எல்லாரும் தனித் தனியாகப் பிரிந்து அங்கு ஒன்றாகச் சேர்வதென முடிவு செய்தனர். அப்படியே பிரிந்து பல பக்கங்களிலும் சென்று ஐந்து நிமிஷத்துக்குள் குறிப்பிட்ட வீட்டை அனைவரும் அடைந்தனர். அவ் வீட்டைச் சுற்றிலும் இருந்த மதிலின் வாயில் பூட்டப்பட்டிருந்தபடியால் ஒன்றாக அனைவரும் அச்சுவர்மீது ஏறி உள்ளே குதித்தார்கள். அப்போது அங்கே இருந்த நாய் குலைக்கவே ராட்சஸ குப்பன் தன் கையிலிருந்த தடியால் ஓங்கி அதன் தலைமீது ஒரு அறை கொடுக்கவே அது எமனுலகம் சென்றது. அவன் வாயிலருகிலேயே காவல் இருந்தான். இந்திராபாய் மற்ற மூவருடனும் வீட்டு வாயிலை அணுகி அவர்களை ஒரு புறமாக நிற்கவைத்துத் தான்மட்டும் வாயில் கதவைத் தட்டினாள்.

கதவைத்தட்டிய ஒரு நிமிஷத்துக்குள் ஒரு வேலைக்காரி

வந்து கதவைத் திறந்தாள். இந்திராபாய் உள்ளே நுழைந்து ஹாலைச் சுற்றிப் பார்த்ததில் வேறு யாருமில்லையென்று தெரிந்துகொண்டாள். உடனே வேலைக்காரியைப் பார்த்து, 'மாதே! நீ கூச்சலிடாமல் சும்மா இருந்தால் உனக்கு எப்படிப்பட்ட கஷ்டமும் ஏற்படாது. அதற்கு மாறாகக் கூச்சல் போடுவாயானால் அதனால் ஏற்படும் பலனை அனுபவிக்க வேண்டியது,' என்று கூறிக்கொண்டே, அவ்வேலைக்காரியை மிரட்டும்பொருட்டுத் தன் கையிலிருந்த கைத்துப்பாக்கியைக் காண்பித்தாள். இதையெல்லாம் கண்ட வேலைக்காரி பயந்து போய் ஒரு மூலையில் ஒடுங்கினாள். அப்போது இந்திராபாயின் ஆட்களான நால்வரும் உள்ளே வந்தார்கள். உடனே வாயிற் கதவும் மூடப்பட்டது. உடனே அவள், வேலைக்காரியைப் பார்த்து, 'என் ஆள் ஒருவனுடன் நீ இங்கேயே இரு. நான் மற்றவர்களுடன் இக்கட்டடத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். இதோ ஜெயசிங் உன்னைப் பார்த்துக்கொள்வான்' என்று சொன்னாள். அச்சத்தால் நடுநடுங்கிய அவ்வேலைக்காரி ஹாலில் இருந்த ஒரு நாற்காலியில் பேச்சு மூச்சில்லாமல் சாய்ந்துவிட்டாள். ஜெயசிங்கும் கைத்துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொண்டு அவளிடம் காவல் இருக்க, இந்திராபாய், ராட்சஸ குப்பன், மற்றுமிரு ஆட்கள் ஆகிய நால்வரும் தங்கள் ஆயுதங்களைக் கையிலேந்தியவண்ணம் ஹாலிலிருந்து எதிரிலிருந்த அறையில் புகுந்தார்கள். அந்த அறையில் யாருமில்லை. அங்கிருந்து பக்கத்திலிருந்த சமையலறைக்குச் சென்றார்கள். அங்கு ஒரு சமையல்காரனும், தோட்டக்காரனும் உட்கார்ந்துகொண்டு ஹாலில் நடந்ததொன்றையும் அறியாதவர்களாய்த் தங்கள் இராச் சாப்பாட்டை அருந்திக்கொண்டிருந்தனர். அவர்களிருவரும் ஆயுதங்களுடன் உள்ளே புகுந்த நால்வரையுங்கண்டதும் திடுக்கிட்டு எழுந்தனர். அப்போது இந்திரா

பாய், அவர்களிடம், அவர்கள் சத்தம் செய்யாமல் சும்மா இருந்தால் அவர்களுக்கு எப்படிப்பட்ட ஆபத்தும் வாதென்று தெரிவித்ததால் அவர்கள் சிறிது தைரியமடைந்தனர். உடனே அவர்களிருவரும் ஹாலுக்கு வேலைக்காரியிடம் அனுப்பப்பட்டனர்.

பிறகு இந்திராபாயும், மற்ற மூவரும் மாடியின் முதல் கட்டில் சென்று எல்லா அறைகளையும் பார்த்தார்கள். அங்கு யாரும் இருக்கவில்லை. பிறகு இரண்டாவது கட்டுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு அறையில் யாரோ சிலர் பேசுவதுபோலவும் நடமாடுவதுபோலவும் கேட்டது. உடனே இந்திராபாய் முன்செல்ல மற்றவர் பின்செல்ல அவ்வறையில் நுழைந்தார்கள். அங்கு அவர்கள் கண்டதென்ன? ஒரு பெண் ஐவர்முன் முழங்காலிட்டுப் பணிந்து தன்னிடம் இரக்கத்துடன் நடந்துகொள்ளும்படி பிரார்த்தித்துக்கொண்டிருந்தாள். அவள் கூந்தல் அவிழ்க்கப்பட்டு நீண்டு தொங்கிக்கொண்டிருந்தது. கண்களில் நீர் வடிந்துகொண்டிருந்தது. அப்பெண்தான் கோகிலம் என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். அந்த ஐவர் யாரென்றால், தர்மலிங்கம் பிரபு, வீரபாலய்யா, மங்களம், அம்புஜம், வேலைக்காரன் ஆகிய ஐவரே. மங்களம் தன் கையில் ஒரு கிண்ணத்தில் எதையோ வைத்துக்கொண்டு அதைக் குடிக்கும்படி கோகிலத்தினிடம் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளைக் கட்டாயப் படுத்துவதற்காக அவள்மீது ஒரு அறை கொடுக்கும் நோக்கத்துடன் வீரபாலய்யா கையை உயர்த்தியிருந்தான். ஆனால், இந்திராபாயும் அவளுடைய ஆட்களும் திடீரென்று உள்ளே பிரவேசித்ததால் அவர்களுடைய நிலைமை யெல்லாம் மாறிவிட்டது. மங்களம் தன் கையிலிருந்த கிண்ணத்தைப் பயத்தால் கீழே போட்டுவிட்டாள். அம்புஜம் ஒ

வென்று கத்தினுள். கோகிலம் 'அப்பாடா' என்று சொல்லிக்கொண்டு எழுந்தாள். தர்மலிங்கம் பிரமிப்புடன் பார்த்தான். ஆனால் வீரபாலய்யா ஒருவன்தான் தைரியமாக வந்தவர்களைப் பார்த்து அவர்கள் என்ன வேலையாக அங்கு வந்தார்களென்று விசாரித்தான். அப்போது இந்திராபாய் தன் கையிலுள்ள கைத்துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாராக இருப்பவள்போல் வைத்துக்கொண்டு, 'எங்களை எதிர்க்க முயற்சி செய்வதில் சிறிதும் பிரயோசனமில்லை' என்று மிரட்டினுள். ராட்சஸ குப்பனும் கோர ரூபத்துடன் அவள் பக்கத்தில் நின்று தன் தடியைத் தூக்கிக் காண்பித்தான். மற்ற இரு ஆட்களும் துணியை வரிந்துகட்டி, 'ஜாக்கிரதை. ஒன்றும் எதிர்த்துப் பேசவேண்டாம்' என்று கர்ஜித்தார்கள். இதையெல்லாம் பார்த்ததும் அங்கிருந்த யாருமே இவர்களை எதிர்க்கத் துணியவில்லை.

ஆயினும் வீரபாலய்யா சமாளித்துக் கொண்டு, 'உங்களுக்கு என்னவேண்டும்? எதற்காக வந்தீர்கள்?' என்று கேட்டான். அப்போது இந்திராபாய், 'முதலாவதாக இப்பெண்மணியை மீட்கவே நாங்கள் இங்கு வந்தோம்' என்று சொன்னதும் அதைக் கேட்ட கோகிலம் அதிக சந்தோஷத்துடன் ஒரே பாய்ச்சலாக அவர்கள் பக்கம் சென்று நின்று, 'நானும் அப்படித்தான் நினைத்தேன்' என்றுள். அப்போது அம்மாது, 'பெண்ணே! நீ எதற்கும் பயப்படவேண்டாம். உன் கடிதத்துண்டைப் பார்த்ததன் பயனுகத்தான் நான் இங்கே வந்தேன். நீ சற்று பின்னுல் நில். இவர்களுடன் எனக்கு இன்னும் சிறிது வேலை இருக்கிறது' என்று சொன்னுள். கோகிலம் ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தாள். தன்னை விடுதலை செய்ய அவர்கள் வந்ததற்காகச் சந்தோஷப்பட்டாள். ஒரு பெண்மணியே ஆண்வேடத்துடன் வந்து

தன்னை மீட்பது கண்டு ஆச்சர்யப்பட்டாள். உடனே அந்த இந்திராபாய், 'அந்த ஆட்களையெல்லாம் பிடித்துக் கட்டுங்கள். யாரேனும் எதிர்த்தால் என்ன செய்யவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?' என்று கூறியதும் ராட்சஸ குப்பன், ஜெயசிங், மற்றுமிருவர் ஆகிய நால்வரும் தங்களிடமிருந்த உறுதியான கயிற்றால் தர்மலிங்கம் பிரபு, வீரபாலய்யா, வேலைக்காரன் ஆகிய மூவரின் கையையும் சேர்த்து ஒன்றாகக் கட்டினார்கள். அப்போது அம்புஜம் ஒரு மூலையில் ஒதுங்கிப்போய் அழுதுகொண்டு நின்றாள். மங்களம் அழவில்லையென்றாலும் வேறொரு பக்கம் நின்று அச்சத்துடன் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னைப்போன்ற பெண்களிடம் அனுதாபங் கொண்ட கோகிலம் இந்திராபாயைப் பாத்து, 'அந்த இரு மாதர்களை மட்டும் ஒன்றும் துன்புறுத்த வேண்டாம். அவர்கள் எனக்கு அதிக கொடுமையை இழைத்தார்களென்றாலும் அவர்களைப் பழிவாங்க நான் நினைக்கவில்லை' என்று கூறியதும், இந்திராபாய், 'பெண்ணே! எங்கள் இஷ்டப்படி காரியத்தை நடத்த விட்டுவிடு. நீ இனி எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. தாராளமாக எங்கும் போகலாம். இன்னும் யாராவது பெண்கள் உன்னைப்போன்ற நிலைமையில் இங்கே இருக்கிறார்களா?' என்று கேட்டாள்.

அதற்குக் கோகிலம், 'எனக்குத் தெரியாது. ஆனால் இங்கு ஒரு ஆடவன் இருக்கிறான் எனத் தெரிகிறது. அவன் விஷயத்தில் எனக்கு மிக்க அனுதாபமிருக்கிறது' என்றதும் இந்திராபாய், 'சரி; அம்மனிதனும் இச்சிறையினின்றும் விடுவிக்கப்படுவான்' நீ பயப்படாதே' என்றாள். அதைக் கேட்ட தர்மலிங்கம் பிரபு, 'முடியாது. நீ அப்படிப்பட்ட அக்கிரமத்தைச் செய்ய இடங் கொடோம்' என்று சொன்னான். அச்சமயத்தில் அவனும், வீரபாலய்யாவும், சேவகனும் தனித்

தனியே ஒவ்வொரு நாற்காலியுடன் கட்டப்பட்டுக் கிடந்தார்கள். தர்மலிங்கம் பிரபு அவ்வாறு கூறியதைக் கேட்ட இந்திராபாய், கோகிலத்தைப் பார்த்து, 'இந்த கிழவன் யார்? இவன்தான் வீரபாலய்யாவா?' என்று கேட்டாள். 'அப்போது தர்மலிங்கம் பிரபு, 'எனதன்புள்ள கோகிலம்! தயவு செய்து அந்த கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்லாதே. நீ என் பேச்சைக் கேட்பாய் என்று நம்புகிறேன்' என்று அடித்துக் கொண்டான். ஆயினும் அக் கட்டிடத்திலிருந்தவர்களெல்லாம் அவளுக்கு விரோதிகளாகவே இருந்தபடியாலும், அவர்களிடம் சிறிதும் தயை தாட்சண்யம் காண்பிக்க அவள் சம்மதிக்காமையாலும் உடனே இந்திராபாயிடமும் மற்றவர்களிடமும் எல்லாருடைய பெயரையும் நடத்தையையும் நன்ருகச் சொல்லிவிட்டாள்.

அதையெல்லாம் கேட்ட இந்திராபாய், 'ஓ! உன்னுடைய கடிதத் துண்டாலும், பிறகு நான் விசாரித்திருந்ததிலிருந்தும் இக்கட்டடம், பெரிய மனிதர்கள் என்பவர்கள் அயோக்கியத்தனமாகக் கண்ட பெண்களைத் தூக்கிக்கொண்டு வந்து பலாத்காரமாக இன்பமனுபவிக்கும் இடங்களில் ஒன்று என்று தெரிந்தது இப்போது சரியாய்விட்டது' என்று கூறிக் கொண்டே சிறிது தூரம் நடந்து மேஜையைப் பார்த்ததில் அதன்மீது வைர நகைகளும், தங்க நகைகளும், நோட்டுகளும் வைத்திருப்பது கண்டு சந்தோஷமடைந்து, 'ஆ! என்ன அழகான நகைகள்! இதையெல்லாம் எடுத்துப் பத்திரப் படுத்து' என்று ராட்சஸ குப்பனிடம் கூறினாள். அதைக் கேட்ட கோகிலம், தன்னை விடுவிக்கவந்த அவர்கள் ஒரு பெண்ணைக் கஷ்டத்தினின்றும் விடுவிக்கவேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் மட்டும் அவ்விடம் வாராமல் கொள்ளையடிக்கவும் வந்திருக்கிருர்கள் என்பதை அறிந்ததும் திக்

பிரமையடைந்தாள். அப்போது ராட்சஸ குப்பன் நோட்டு களை யெல்லாம் எண்ணிப் பார்த்துவிட்டு ஆயிரம் பவுன் பெறு மான நோட்டுகள் இருக்கின்றன என்று தெரிவித்தான். இந்திராபாய் கோகிலத்தைப் பார்த்து, 'எனதன்புள்ள பெண்ணே! நம்முடைய இப்போதைய நடவடிக்கைகள் ஒன்றைப்பற்றியும் நீ கவலைப்பட வேண்டாம். உனக்காக நாங் கள் எடுத்துக்கொண்ட சிரமத்துக்குரிய சன்மானத்தையும் இவ்வகையில் பெறத் தீர்மானித்திருக்கிறோம்,' என்றாள்.

பிறகு ராட்சஸ குப்பன் உத்தரவின்மீது மற்ற இரு ஆட்களும், தர்மலிங்கம் பிரபு, வீரபாலய்யா முதலியவர்க ளின்மீது இருந்த வைரப் பொத்தான், கடிகாரம் போன்ற விலையுயர்ந்த நகைகளை அப்புறப்படுத்தினர். இதையெல்லாம் பார்த்துக் கோகிலம் மனவருத்த மடைந்தா ளென்றாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவுமில்லை. மறுபடியும் இந் திராபாய், 'மற்றொரு ஆளை விடுவிக்க வேண்டுமென்று சொன் னையே. அவன் எங்கே இருக்கிறான்' என்று கேட்க அவள் 'அவன் எங்கு இருக்கிறான் என்பது எனக்குத் தெரியாது. அவனைத் தேடவேண்டும்' என்று தெரிவித்தாள். அதற்கு இந் திராபாய, 'சரி; நாம் அவனைத் தேடுவோம். விரைவில் இங் கிருந்து எல்லாரும் வெளியேற வேண்டுமாதலால் நீ வேறு புடவையைக் கட்டிக்கொள்' என்றாள். கோகிலம் அடுத்த அறைக்குச் சென்று தான் முதலில் வந்தபோது எந்த உடை யுடன் வந்தாளோ அதையே எடுத்து அணிந்து கொண்டாள். கோகிலம் வேறு அறைக்குப் போயிருக்கும்போது தர்மலிங் கம் பிரபு இந்திராபாயினிடம் ஏதோ இரகசியம் பேச விரும் பினான். அவள் பகிரங்கமாகவே அதைச் சொல்லும்படி கேட் டாள். அப்போது அவன் அவள் எங்கு எப்படி வந்தாள் என்று கேட்டான். அதற்கு அவள் தக்க பதில் சொன்னாள்.

பிறகு அவன் எப்படியாயினும் அவள் மற்றொரு ஆளை விடு விக்கக் கூடாதென்றும் அவன் பைத்தியக்காரனென்றும் தெரிவித்தான். அச்சமயத்தில் வேறு அறைக்குச் சென் றிருந்த கோகிலமும் வந்து விட்டாள். தர்மலிங்கம் பிரபுவும், இந்திராபாயும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்ட அவள், 'நல்ல காரியம் செய்வதினின்றும் தவறி விடாதே, நீ யாராயிருந்தாலும் சரி, இன்று எடுத்துக்கொண்ட வேலை யைத் திருப்திகரமாகச் செய்து முடித்து விடு. மற்றொரு ஆள் இங்கு ஏதோ விசித்திரமான நிலைமையில் இருக்கிறான். இவனைப்பற்றிய மர்மம் ஏதோ இருக்கிறது' என்று வணக் கத்துடன் தெரிவித்துக் கொண்டாள். அப்போது இந் திராபாயும், 'ஆம்; அவனைப்பற்றி ஏதோ விசேஷ மிருக்கிறது. அந்த ஆளைப் பார்க்கலாம். வா.' என்று கூறிக்கொண்டே புறப்பட்டபோது தர்மலிங்கம் பிரபு, 'தயவு செய்து காது கொடுத்துக் கேள். ஒரே ஒரு கடைசி வார்த்தை' என்ற தும் அதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் எண் ணத்துடன் சிறிது குனிந்து கேட்டதில் அப்பிரபு மெது வாக, 'அந்த ஆளை விடுவிக்காமல் இத்துடன் போய்விட்டால் மூவாயிரம் பவுன் தருவேன்' என்றான். அதைக் கேட்டதும் அவள் உரத்த குரலில், 'மூவாயிரம் பவுன், ஓ! நல்லதொகை தான். ஆனால் அவனை வைத்திருப்பதற்கே நீ இவ்வளவு கொடுப்பதாக இருந்தால் அவன் விடுதலை யடைந்த பின்னர் இன்னும் பெரிய தொகையை அவன் எனக்குத் தரலாம்,' என்று கூறி விட்டாள்.

ராட்சஸகுப்பன் இந்த மூவாயிரம் பவுனையே பெற்றுக் கொண்டு மற்றொரு ஆளை விடுக்காமல் போய் விடலாம் என்று நினைத்து அதை இந்திராபாயினிடமும் தெரிவித்தான். ஆனால் அவள் அதைக் கண்டிப்பாக மறுத்துவிட்டு அவன்

தன்னிஷ்டப்படி நடக்கவேண்டுமென அவனையும் கண்டித்து அந்த ஆளைத் தேடப் புறப்பட்டாள். அவளுடன் ராட்சஸ குப்பனும் கோகிலமும் சென்றார்கள். மற்ற இரு ஆட்கள் கைதியானவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அம்மனிதனைத் தேடச் சென்றபோது தர்மலிங்கம் பிரபுவும், வீரபாலய்யாவும் அதிக துக்கத்துடன் பெரிதும் கவலைப் பட்டார்கள். வெளியில் சென்ற அவர்கள் அங்கிருந்த விளக்கு ஒன்றை எடுத்துக்கொண்டு எப்படியோ வழி கண்டுபிடித்து மேல் மாடிக்குச் சென்றார்கள். ஒரு அறையைப் பார்த்தனர். அதில் யாருமில்லை. ஆனால் கீழே கோகிலம் இருந்த அறைக்குச் சரியாக மேலிருந்த அறைக்கு வந்ததும் அங்கும் யாரும் காணப்படவில்லை யென்றாலும் அதற்குச் சரியாக மேல் அறையில் யாரோ அழுவதுபோல் சத்தம் கேட்டது. அச்சத்தத்தைக் கேட்டதும் கோகிலம், 'ஆ! இதுதான் நான் முதல் இரண்டுநாள் இரவில் கேட்டது' என்று சொல்லிக்கொண்டு அந்த அறைக்குப் போக வேண்டுமென்றாள் அவர்கள் வெளியே வந்து பார்த்ததில் அத்தாழ்வாரத்தின் ஒரு மூலையில் மேல்மாடிக்கு வழி சென்றது. அதன் வழியே நான்காவது அடுக்குக்குச் சென்று குறிப்பிட்ட அறை பூட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். உடனே ராட்சஸகுப்பன் தன்னிடமிருந்த கூரிய கடப்பாறையால் அப்பூட்டைத் தகர்த்தெறிந்தான். மூவரும் உள்ளே போய்ப் பார்த்தனர், அவ்வறை இருட்டாக இருந்தது. அந்த அறையில் ஒரு படுக்கை, ஒரு மேஜை நாற்காலி, ஒரு முகம் கழுவும் மேஜை, சில சாமான்கள் ஆகியவைகள்தான் இருந்தன. வெளுத்துப்போன முகத்துடனும் மெல்லிய தேகத்துடனும் கூடிய அவன் ஒரு மூலையில் பெரிய போர்வையைப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தான். அறையில் புகுந்தவர்களையும் விளக்கையும் உற்றுப் பார்த்தான் எல்லா

ரும் புதிதாகத் தெரிந்தது. ஆனால் கோகிலத்தைப் பார்த்ததும் அடையாளம் தெரிந்துகொண்டு சிரித்தான். அப்போது கோகிலம் இந்திராபாயின் அனுமதியின் மீது அவனிடம், 'ஐயா, உன்னை விடுவிப்பதற்காக நாங்கள் வந்திருக்கிறோம். எங்களுடன் வெளியே வந்துவிட உனக்குச் சம்மதம்தானே' என்று இனியகுரலில் மெதுவாகப் பேசினாள். உடனே அவனும் மிக ஆர்வத்துடன், 'ஆஹா! அதற்கென்ன ஆட்சேபம்? உங்களுடனேயே சந்தோஷமாக வந்து விடுவேன்' என்றான். பிறகு எல்லாருமாகச் சேர்ந்து சிழ்க்கட்டுக்கு இறங்கி வந்தார்கள்.

தர்மலிங்கம் பிரபு முதலியவர்கள் இருந்த அறைக்கு வெளியே வந்ததும் அந்த ஆளுக்கு வேறுஉடை வேண்டுமே என்று யோசித்ததில் பிரபுவின் சேவகனுடைய சாதாரண உடைதான் சரியானதென நினைத்து இந்திராபாய் மட்டும் உள்ளே போய் அந்த சேவகனை வெளியே அழைத்துக் கொண்டு வந்தாள். அவன்தான் அணிந்த உடையைக் கொடுக்கச் சம்மதப்படாமல் வேறு உடையைக்கொண்டு வருவதாகச் சொல்லி வேறு அறைக்குப் போனான், ராட்சஸ குப்பனும் அவனுடன் காவலாகப் போனான். இரண்டொரு நிமிஷத்தில் அவன் திரும்பி வந்து உடையைக் கொடுத்ததும் இந்திராபாய் அவனை உள்ளேபோய்த் தன் ஆட்களை அனுப்பி விடும்படி சொன்னாள். அப்போது அவன், 'சரிதான். அதோ அந்த ஆளை மீட்டீர்களே. அது விஷயமாய் உங்களுக்குச் சாட்சி வேண்டியதாய் இருக்குமே' என்றான். உடனே இந்திராபாய், 'ஆம்; அதுவும் நல்ல யோசனைதான், உன் பெயரைச் சொல். நாளை மறுநாள் நீ இவ்விடத்துக்கு அடுத்த போஸ்டாபீசுக்கு வந்து உனக்குக் கடிதமிருக்கிறதா என்று விசாரி' என்று தெரிவித்தாள். அவனும் தன் பெயர்

மாணிக்கம் என்று சொல்லிவிட்டுப் போனான். அவன் உள்ளே சென்றதும் இந்திராபாயின் இரு ஆட்களும் வெளியே வந்தார்கள். உடனே எல்லோருமாகச் சேர்ந்து போன வழியே முன்புற ஹாலுக்குள் வந்ததும் அங்கு வேலைக்காரர்களைக் காவல் காத்துக் கொண்டிருந்த ஜெயசிங்கையும் அழைத்துக் கொண்டு அக் கட்டடத்தைவிட்டு வெளியேறி விட்டனர். அவர்கள் கோகிலத்தையும் மற்றொரு ஆளையும் அழைத்துக் கொண்டு செல்வது கண்டு கீழே இருந்த வேலைக்காரர்கள் ஆச்சர்யப்பட்டார்கள்.

அக் கட்டடத்துக்கு அப்பால் வந்ததும் கோகிலம் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாள் என்பதை அளவிடக் கூடுமோ? அவள் தான்பட்ட கஷ்டத்தையெல்லாம் மறந்துவிட்டாள். தன்னை விடுவிக்க வந்தவர்கள் அநியாயமாய்க் கொள்ளையடித்தார்களே என்று நினைத்தாலும் அதையும் மறந்தாள். அவர்கள் நான்கு பேர்தாக்கள் ஒன்றாகச் சேரும் பகிரங்க இடத்துக்குச் சென்றதும் இந்திராபாய் கோகிலத்தைப் பார்த்து, 'கோகிலம்! இனி நீ எங்கேனும் குறிப்பிட்ட இடத்துக்குப் போவா யல்லவா? உனக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்களா? இல்லாவிட்டால் நான் இடம் தருகிறேன்' என்றாள். அதற்குக் கோகிலம், 'ஆஹா! எனக்கு வீடு இருக்கிறது. நானில்லாத வேளையில் எனது தாய்க்கு ஒன்றும் ஆபத்து வாராதபடி கடவுள் காப்பாற்றியிருப்பாரானால் எனக்கு இருப்பிடம் இருக்கிறது. நான் உனக்கு இன்னும் வந்தனம் செலுத்தவில்லை யல்லவா? அது இருக்கட்டும்; இக்கட்டடத்தில் நீ செய்த வேலை விசித்திரமாய் இருக்கிறதே. அதன் விவரம் எனக்குத் தெரியலாகாதா?' என்றாள். உடனே இந்திராபாய், நீ கேட்டது இன்னதெனத் தெரிந்து கொண்டேன். என் ஆட்கள் கொள்ளை யடித்தார்களே அதைப்பற்

றிக் கேட்கிறாய். அந்த விவரமெல்லாம் உனக்கு வேண்டாம். நீ விடுதலை யடைந்ததற்காகச் சந்தோஷப்பட்டு மற்ற விஷயங்களைப்பற்றிக் கவலைப்படாமல் அவைகளை அடியோடு மறந்துவிடு. உன் கடிதத்துண்டை போலீஸ் அதிகாரிகளிடம் கொடுத்திருந்தால், இது பைத்தியக்கார விடுதியாதலால் இதில் தலையிட்டிருக்கமாட்டார்கள். ஆகவே நானே இதில் பிரவேசிக்க வேண்டுமென்று நினைத்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்தது சரியல்லவா? நான் உன்னை விடுவிப்பதில் அனுஷ்டித்த முறையைப்பற்றி நீ விசாரிக்கக் கூடாது' என்று விவரமாகக் கூறினாள்.

அப்போது கோகிலம், 'சரிதான். எப்படியாவது என்னை விடுவித்ததற்காக நான் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். என்னை விடுவித்த மாதாகிய உன் பெயரை நான் அறியலாமோ?' என்று ஆர்வத்துடன் கேட்டாள். அதற்கு இந்திராபாய், 'இப்போது நான் அணிந்திருக்கும் உடையில் எனக்கு காப்டன் அர்ஜுனசிங் என்று பெயர். நான் பெண் உடையில் இருப்பேனாயின் ஸ்ரீமதி. அர்ஜுனசிங் ஆவேன். இதோ என் விலாசம் இருக்கிறது. இப்போது நாம் விடுதலை செய்த இந்த ஆடவனைப்பற்றிப் பல விஷயங்கள் வெளியாகலாம். அவற்றை நீ அறியவேண்டுமென்றால் என்னிடம் வரவேண்டாமா? உனக்கு ஏதேனும் பணம் வேண்டுமா?' என்று விசாரிக்கவும் கோகிலம், வேண்டாமென்று மிக்க மரியாதையுடன் தெரிவித்தாள். அப்போது இந்திராபாய், 'ஓஹோ! என்னிடமுள்ள பணம் நியாயமான முறையில் சம்பாதிக்கப்பட்டதல்லவென்பது உன் அபிப்பிராயம் என்பதை நான் அறிந்து கொண்டேன். சரி; உனக்குப் பணம் உதவி அவசியமில்லை என்றால் அதுவரை சந்தோஷமே. இன்று இரவு நடந்த இச் சம்பவத்தை நீ எங்கும் சொல்ல

லாகாது. நீ எனக்கு வந்தனம் செலுத்துவதில் பயனில்லே. ஆனல் நீ தர்மலிங்கம் பிரபுவினிடமிருந்து எவ்வளவுதான் கஷ்டத்தை அடைந்திருந்தாலும் அதற்காக நீயோ உன் நண்பர்களோ அவன்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது என் எண்ணம். ஏனெனின் கோர்ட்டுக்குப் போவதென்று போனல் பாதி பொய்யும் பாதி மெய்யும் பேச முடியாது. நீ அக்கட்டடத்தில் எப்படி எடுத்துச் செல்லப் பட்டாய் என்பதைச் சொன்னல் எப்படி அங்கிருந்து விடுதலே யடைந்தாய் என்பதையும் சொல்ல வேண்டாமா? இதனல் போலீசார் என்னைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படும். உன்னை விடுவிக்க எனக்கு இத்தகைய கஷ்டம் வரும்படி நீ நடந்துகொள்ள மாட்டாய் என்று நம்புகிறேன்' என்றன்.

186574
சென்னை-600 00

அதற்குக் கோகிலம், 'நான் நிச்சயமாக நீ அகப்படும்படி ஒன்றும் செய்ய மாட்டேன் என்பதைத் திண்ணமாக நம்பு' என்று கூறியதும் இந்திராபாய் சந்தோஷமடைந்து, 'நீ ஒரு நல்ல பெண், வாழ்க்கையில் நம் இருவருடைய துறையும் வித்தியாசப்பட்டிருக்கிறது. ஆயினும் நாம் விரைவில் மற்றொரு முறை சந்திப்போம். நீ என்னை வந்து பார்ப்பாய் என்று நம்புகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கோகிலத்தின் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டுத் தன் தோழர்களுடனும் அப்புதிய ஆளுடனும் ஒரு வழியாகப் போய்விட்டாள் கோகிலம் வேறொரு வழியாகச் சென்றுள். கோகிலம் தனியாகவும் அச்சத்துடனும் நீண்டநேரம்வரை நடந்து சுமார் ஒன்றரை மணிக்குத் தான் முன்பு தன் தாயையும் சகோதரியையும் எந்த இடத்தில் விட்டுப் பிரிந்தாளோ அந்த இடத்துக்குச் சென்று கதவைத் தட்டினள். பதில் வருமென்று மிக ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம் பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | 3 | 0 | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ.167, மதராஸ்

# “ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நம்து சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 7-பாகமும் ... | 13 | 14 | தினகரசுந்தரி | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும்... | 3 | 0 | தபால்கோள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | ரத்தினபாய் ... | 1 | 18 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 10 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம்2பாகம்... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| இராஜாமணி ... | 2 | 0 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ... | 9 | 10 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| | | | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.